தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

# அன்பு பகிர்வு இயக்கம்

மலர் : 11 இதழ் : 12 அக்டோபர் – 2015

## செய்திமலர்



## ஷாலோம் கிராம ஆலயம்

# ஜாலிம்புரா

### மத்தியப்பிரதேசம்



ஜாலிம்புரா என்ற கிராமம் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பான்ஸ்வாடா மாவட்டத்தில் சஜன்கட் தாலுகாவில் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் வாழும் மக்கள் சாராயம் காய்ச்சிக் குடிப்பது, சண்டையிடுவது, இறந்த ஆவிகளையும், விக்கிரகங்களையும் வணங்கும் பழக்கமுடையவர்கள். இந்த சூழ்நிலையில் வாழ்ந்த சகோ. நவல்சிங் கராசியா அவர்கள் இயேசுவை அறியாத போது சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். இவருடைய மனைவி ரசீலா பேன் திடீரென்று வியாதிப்பட்டு, மிகவும் கஷ்டப்பட்டார்கள். அவர்களின் சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை.

இந்நிலையில் ஷாலோம் ஊழியர் சாமு கலாசுவா என்பவர் இயேசுவைப் பற்றிக் கூறி, இவருடைய மனைவிக்காக ஜெபித்ததில் தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் இயேசுவை குடும்பமாக சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். பின்பு 1992–ம் ஆண்டில் நவல் கராசியா அவர்களின் வீட்டில் சாமு கலாசுவா அவர்கள் 3 குடும்பத்துடன் கூட்டம் நடத்த ஆரம்பித்தார். ஆரம்ப நாட்களில் கூட்டம் நடத்துவதற்கு கிராம மக்கள் மிகவும் எதிர்த்தனர். ஆனாலும் விசுவாசிகள் சோர்ந்து போகாமல் உபவாசத்துடன் ஜெபித்ததில் தேவன் சூழ்நிலைகளை மாற்றினார்.

பின்பு நவல்சிங் கராசியா அவர்கள் ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, 1 மாத ஊழியப்பயிற்சி பெற்று, கூட்டத்தை பொறுப்பேற்று நடத்த ஆரம்பித்தார். அப்பொழுது அடிக்கடி வாயிலிருந்து இரத்தம் வந்து கொண்டிருந்த குஜ்லி பேன் என்ற சகோதரி கூட்டத்தில் பங்கு பெற்றாள். ஊழியர் அந்த சகோதரிக்காக ஜெபித்த போது தேவன் பரிபூண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் கிராம மக்கள் இயேசுவை விசுவாசித்து, சபைக்கு வர ஆரம்பித்தனர். சபை வளர்ந்து பெருகியது. தற்போது 30 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு, வாரந்தோறும் சபையில் ஆராதித்து வருகிறார்கள். இந்நிலையில் ஊழியர். நவல் கராசியா அவர்கள் காணிக்கையாக கொடுத்த நிலத்தில் தற்போது புதிய ஆலயம் கட்டப்பட்டு, 19.09.2014 அன்று பேராயர் வே. தேவதாஸ் அவர்கள் முலம் தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த ஆலயம் நாலுமாவடி, **இயேசு விடுவிக்கிறார்** ஊழியத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் கட்டப்பட்டது.

**ரூ. 3 இலட்சங்கள் (or) ரூ. 2 இலட்சங்கள் மதிப்புகளில் இந்த 2015 ஆம் ஆண்டிற்குள் 100 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!**

## உங்கள் சகோதரனிடமிருந்து



**கிறிஸ்துவுக்குள் மிக அன்பான ஷாலோம் பங்காளர்களே,**

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். குஜராத் பணித்தளத்திலிருந்து உங்கள் யாவருடனும் தொடர்பு கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த செப்டம்பர் மாதம் முழுவதும் பீல் மக்கள் மத்தியில் நடைபெற்ற ஒவ்வொரு ஊழியங்களிலும் தேவன் அற்புத அடையாளங்களை நடத்தி, ஆத்துமாக்களை தந்து கொண்டே இருக்கிறார். உங்கள் கண்ணீரின் ஜெபங்களுக்காகவும், ஆத்தும பாரத்துடன் கொடுக்கும் காணிக்கைக்காகவும் தேவனை துதித்து உங்களுக்கு எங்கள் நன்றிகளை கூறுகிறோம்.

மலரின் உள்ளே கொடுக்கப்பட்ட செப்டம்பர் மாத ஊழிய அறிக்கையை வாசித்து தேவனுக்கு மகிமை செலுத்துங்கள். மூன்று மாநிலங்களில் குறிப்பாக இராஜஸ்தானில் ஜாலிப்பூரா, நவப்பாடா மத்தியப்பிரதேசத்தில் சாலக்கியா, டிக்கிடி, அலிப்பூரா ஆகிய 5 கிராம ஆலயங்களை கட்டிமுடிக்க தேவன் கிருபை தந்துள்ளார். மேலும் 15 கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலய கட்டுமானப் பணிக்காக ஜெபியுங்கள்.

மத்தியப்பிரதேசத்தில் ஆங்காங்கே எழும்பியுள்ள எதிர்ப்புகள் நீங்கத்தக்கதாகவும், விசுவாசிகள் மற்றும் சபை கர்த்தருக்குள் நிலைத்திருக்க ஜெபியுங்கள். 01.09.2015 முதல் ஷாலோம் ஜெப மையம் **(Shalom Prayer Center)** ஆரம்பிக்கப்பட்டு முதற்கட்டமாக 12 மணி நேர ஜெபம் (காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை) பீல் மக்கள் இரட்சிப்பிற்காகவும், சபை எழுப்புதலுக்காகவும், தேசத்திற்காகவும் ஜெபிக்க எழுப்பப்பட்டுள்ளது. மேலும் 24 மணி நேர ஜெப உதவிக்காக தொலைபேசி ஜெபம் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

அனுதினமும் 25–வது வெள்ளி விழா திட்டங்கள் **1000 பீல் சுதேச ஊழியர்கள் 1000 கிராம சபைகள், ஒரு இலட்ச விசுவாச குடும்பங்களை** தேவன் கட்டளையிடவும்; 250 புதிய கிராம ஆலயங்கள் கட்டப்படவும்; வெள்ளிவிழா கட்டட திட்டங்களான ஷாலோம் பவன் (குஜராத்) அந்தர்வேலியா ஷாலோம் பேராலயம் (மத்தியப்பிரதேசம்), ஷாலோம் மிஷன் பள்ளி மற்றும் விடுதி கட்டடங்கள் கட்டப்பட **ரூ. 300 இலட்சங்கள்** சந்திக்கப்பட ஜெபித்து தாங்கவும், மற்றவர்களை அறிமுகப்படுத்தவும் அன்புடன் கேட்கிறேன். நாங்கள் குடும்பமாக, சபையாக, ஜெபக் குழுவாக உங்கள் யாவருக்காகவும் ஜெபித்து வருகிறோம்.

**“தாவீது நாளுக்குநாள் விருத்தியடைந்தான்; சேனைகளுடைய கர்த்தர் அவனோடகூட இருந்தார்.” (1 நாளாகமம் 11:9)** என்ற வசனத்தின்படி தேவன்தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக!

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)



# வாசற்படியிலே நின்று தட்டுகிற இயேசு

சிறப்புச் செய்தி : பேராயர். **வே. தேவதாஸ்**

வேதபுத்தகத்தின் கடைசி புத்தகமான வெளிப்படுத்தின விசேஷத்தில் இரட்சகரான இயேசு கிறிஸ்து கொடுக்கும் கடைசி அன்பின் அழைப்புதான் " **இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவை திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்." (வெளி 3:20)** .இயேசு கிறிஸ்து அனைத்து மனுக்குலத்திற்கும் கொடுக்கும் உன்னதமான அழைப்பு, பரம அழைப்பு, அன்பின் அழைப்பு, நித்தியமான அழைப்பு அழைப்பிற்கு இணங்கி சத்தத்தைக் கேட்டு, கதவை திறந்து அவரை ஏற்றுக் கொண்டால், அன்பர் இயேசு கூட பிரவேசித்து, இணைந்து போஜனம்பண்ணும் பாக்கியத்தைத் தருகிறார். எவ்வளவு பெரிய சிலாக்கியம் வேதத்தில் வார்த்தையும் சத்தியமுமான இயேசுகிறிஸ்து கிருபை நிறைந்தவராய் மாம்சமாகி இவ்வுலகில் பிறந்தார். அவருடைய ஊழிய நாட்களில் அநேகருடைய அழைப்பின் பேரில் இயேசு அவர்களுடைய வீடுகளுக்குச் சென்றார். சில வீடுகளில் அவரை வருந்தி அழைத்தார்கள்.ஆனால் சிலருடைய வீடுகளுக்கு இயேசுவே சென்றார். எத்தனை மகிழ்ச்சியான காரியம். அவைகளில் மூன்று வீடுகளுக்குச் சென்று இயேசு ஆசீர்வதித்தக் காரியங்களைப் பார்ப்போம்.

**இரட்சிப்புகிடைத்த சகேயுவின் வீடு**

லூக்கா 19–ம் அதிகாரத்தில் ஆயக்காரருக்கு தலைவனும், ஐசுவரியவானுமாயிருந்த சகேயு இயேசுவை குறித்து கேள்விப்பட்டு இயேசு எப்படிப்பட்டவரோ என்று பார்க்க மனதில் வாஞ்சை ஏற்பட்டது. சரீரத்தில் குள்ளமாக இருந்தபடியால் காட்டத்தி மரத்தில் ஏறி இயேசுவை காண்கிறான். என்ன ஆச்சரியம் அவனுடைய இருதய வாஞ்சையை அறிந்த இயேசு அவனை சகேயுவே என்று பேர் சொல்லி அழைத்து சீக்கிரமாக இறங்கி வா; இன்று நான் உன் வீட்டில் தங்க வேண்டும் என அழைப்புக் கொடுத்தார். சீக்கிரமாக இறங்கினான். சந்தோஷத்தோடே அவரை அழைத்துக் கொண்டு போனான்.

சகேயு இயேசுவின் முகத்தைப் பார்க்கிறான். இயேசுவும் சகேயுவைப்பார்க்கிறார். அவர் முகத்தில் இருந்த பரிசுத்தம், அன்பு, கிருபை சகேயுவை தொட்டது. பாவ உணர்வு பெற்றான். அநியாயமாய் சம்பாதித்து வைத்த, தேவனுக்குப் பிரியமில்லாத ஒவ்வொரு காரியங்களையும் பற்றி உணர்வடைந்து தானாகவே எல்லாவற்றையும் அறிக்கை செய்து விட்டு, பிராயச் சித்தமாக நாலத்தனையாக திரும்பி கொடுக்க மனப்பூர்வமாக தீர்மானித்தான். சகேயுவின் வீட்டிற்குள் இயேசு வருகை தந்த போது ஜனங்கள் பாவியான மனுஷனுடைய வீட்டில் தங்கும்படி போகிறார் என முறுமுறுத்தார்கள். இயேசுகிறிஸ்து சகேயுவே நீ பாவியான மனுஷன் எல்லாவற்றையும்

விட்ட பின்புதான் நான் வருவேன் என கூறவில்லை. பாவத்தை வெறுக்கிறவர் இயேசு. ஆனால் பாவிகளை நேசிக்கிறவர். இயேசு பிரசங்கம் ஏதும் பண்ணவில்லை. சிலுவை நாதர் இயேசுவின் பேரோளி வீசும் தூய கண்கள் சகேயுவை பார்த்த மாத்திரத்தில் சகேயுவும் இயேசுவை நோக்கி பார்த்த மாத்திரத்தில் மனந்திரும்புதல், மனமாற்றம், பாவத்திலிருந்து விடுதலை பரிசுத்தமான வாழ்விற்குள் அடியெடுத்தல்; நித்திய ஜீவனுக்கேற்ற நம்பிக்கையில் பிரவேசித்தல் இவையெல்லாம் உடனடியாக நடைபெற்றது. அதன்பின்பு தான் இயேசு தன் வாயை திறந்து இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது என்று கூறி ஆசீர்வதித்தார்.

எனக்கு பிரியமானவர்களே, நம்மில் அநேகர் வீட்டிற்கு இயேசு வந்திருக்கலாம், பெரிய தேவ ஊழியர்கள் வந்திருக்கலாம். பல தலைமுறையாக கிறிஸ்தவர்களாக இருக்கலாம். நாம் நம்முடைய பாவங்களை அறிக்கை செய்து, விட்டுவிடும் வரைக்கும் இரட்சிப்பின் சந்தோஷத்தின் ஆசீர்வாதத்தை இயேசு கொடுக்க முடியாது. அநேக வீடுகளில் இயேசு வந்து சாப்பிட்டுப் போய் விடுவதைப் போல உங்கள் வீட்டிற்கும் அப்படியே செய்வார். நாமோ சகேயுவைப் போல உண்மையான மனம் மாறுதல், இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளும்போது, இயேசுவின் மனம் மகிழும். நம்மை இரட்சித்து மகிழப்பண்ணுவார். நாமும் இயேசுவின் சத்தத்தைக் கேட்டு கீழே இறங்குவோம், இயேசுவை இல்லத்திற்கு அழைத்துச் செல்லுவோம். இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பெறுவோம்.

**குறைவுகள் நீங்கின கானாவூர் கல்யாண வீடு**

யோவான் 2–ம்; அதிகாரத்தில் நம் அனைவருக்கும் தெரிந்த ஒரு பெயர் தெரியாத கானாவூரின் கல்யாண வீட்டில் இயேசு பிரசன்னமாகி குறைவுகளை நிறைவாக மாற்றி ஆசீர்வதித்ததைக் காண்கிறோம். இயேசு கிறிஸ்து இரட்சிப்பின் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை மட்டுமல்ல நம்முடைய வாழ்க்கையில், குடும்பத்தில், தேவன் நமக்கு தந்த தொழிலில் விசேஷமாக சபை மற்றும் ஊழியப்பாதையில் உள்ள அனைத்து குறைவுகளை நீக்கி அற்புதங்களை செய்து நிறைவான ஆசீர்வாதங்களை தந்து நம்மை பரவசப்படுத்துவார்.

கானாவூர் கல்யாண வீட்டின் ஆசீர்வாதத்திற்கு காரணம் இயேசுவும், அவருடைய தாயாரும், சீஷரும் அழைக்கப்பட்டிருந்தார்கள் தேவ பிள்ளைகளாகிய நாம் அனுதினமும் வாருமைய்யா போதகரே என்று காலை மாலையில் குடும்பமாக அவரை பாடி துதித்து, ஆராதித்து அவரை அழைக்கவேண்டும்.

சமீபத்தில் எங்களை மிக அதிகமாக நேசித்து; ஊழியத்தை தாங்கி ஆலோசனைகளை தரும் இயேசுவின் குடும்பமான எனக்கு அன்பான சகோதரருடைய மகள் திருமணத்திற்கு அழைக்கப்பட்டபோது அதை மறுக்கமுடியாமல் கிறிஸ்துவின் அன்பின் நிமித்தமாக நான் பங்கு பெற்று ஆசீர்வாத செய்திகளை கொடுத்தேன். அந்த திருமண வைபவத்திற்கு **சகோ. மோகன் சி லாசரஸ்** அவர்களும் அழைக்கப்பட்டு வந்திருந்தார்கள். அவர்கள் வாழ்த்து செய்தி கொடுக்கும் போது சொன்ன வார்த்தைகள் என்னை மிகவும் தொட்டது எத்தனையோ திருமணங்கள்

நடந்திருக்கும். ஆனால் இயேசு அந்த திருமணத்திற்கு வந்து ஆசீர்வதித்ததற்கு முக்கியமான காரணம் அந்த வீட்டார் இயேசுவுக்கு உறவினர்கள், சொந்தக்காரர்கள். ஏனெனில் இயேசுவின் தாயார் பொறுப்பாக விசாரித்து ஆலோசனைகளை தருகிறார்கள். அதாவது இரத்த சம்பந்தமான உறவுள்ள ஒரு குடும்பமாகக் காணப்பட்டது. ஆகவே இயேசு கிறிஸ்து வந்து குறைவுகளை நீக்கி ஆசீர்வதித்தார்.

நம்முடைய உறவு இயேசுகிறிஸ்துவுடன் எப்படி உள்ளது. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு இனி நான் அல்ல கிறிஸ்து என்னில் ஜீவிக்கிறார் என்ற அனுபவம் உண்டா? இயேசு கிறிஸ்துவை உலகத்தில் உள்ள எல்லா உறவுகளைக்காட்டிலும் அதிகமாக நேசிக்கிறோமா? அனுதினமும் அவருடன் ஏதேன் தோட்ட உறவை வைத்திருக்கிறோமா? அப்படியானால் நம்முடைய வீட்டில், நம்முடைய வாழ்வில், ஊழியப்பாதையில் அவரை அழைக்கும் போது கட்டாயம் இயேசு வருவார். குறைவுகளை நீக்கி நிறைவான ஆசீர்வாதங்களைத் தருவார். நம்மையும் நம் குடும்பத்தாரையும், ஊழியங்களையும் ஸ்திரப்படுத்துவார்.

**கிறிஸ்துவின் நறுமணம் வீசும் மரியாளின் வீடு**

இயேசு கிறிஸ்துவின் ஊழியநாட்களில் பெத்தானியாவிற்கு வரும் போதெல்லாம் லாசரு, மார்த்தாள், மரியாள் இவர்களின் வீட்டில் தங்குவார். அவர்களோடு போஜனம் பண்ணுவார். எத்தனை பாக்கியம் பெற்ற வீடு. இயேசு கிறிஸ்து இந்த வீட்டை நேசித்து இந்த வீட்டில் வந்து தங்கி, போஜனம் பண்ணுவதற்கு முக்கியமான காரணம் மரியாள் வீட்டார் அனைவரும் இயேசு கிறிஸ்துவை மிகவும் நேசிப்பார்கள்.

ஆகவேதான் இயேசுகிறிஸ்து மரியாள் வீட்டில் சகோதரன் லாசரு இறந்துவிட்ட போது அவர்களுடைய துக்கத்திலும், கண்ணீரிலும் இயேசு பங்கு பெற்று, தன்னுடைய துக்கத்தை தன் கண்களிலிருந்து வரும் கண்ணீரால் பகிர்ந்து கொண்டார். பிரியமானவர்களே, நாம் இயேசுவை மனதார நேசிக்கும்போது, நம் வாழ்வில், குடும்பத்தில், எந்த சூழ்நிலைகளையும் காண்கிறவர் இயேசு விசாரிக்கிறவர் இயேசு மட்டுமல்ல துக்கத்தை சந்தோஷமாக மாற்றுபவரும் இயேசு. நாம் துக்கப்படும் போது அவரும் நம் துக்கத்தில் பங்கெடுத்து ஆறுதல் தரும் தேவன் தான் இயேசு கிறிஸ்து. எனவே கவலைப்பட வேண்டாம். இயேசு நம் அருகில் தான் இருக்கிறார். நம் வாழ்வில் நம்பிக்கையற்ற, மரித்துப்போன சூழ்நிலைகளை மாற்றி அற்புதங்களை செய்து தம் அன்பினை நமக்கு வெளிப்படுத்துகிறார்.

இயேசு கிறிஸ்துவின் அன்பை ருசித்து, இயேசுவை நேசிக்கும் மரியாள் இயேசுகிறிஸ்து தன் வீட்டிற்கு வந்தபோது தன்னிடத்தில் உள்ள விலையேறப் பெற்ற தைலத்தினால் இயேசுவின் பாதங்களை துடைத்தாள். வீடு முழுவதும் நறுமணம் வீசிற்று. **மத்தேயு 26:13–ல்" இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."**

பிரியமானவர்களே நாமும் நம்மை நேசித்து ஜீவனையே தந்த இயேசு கிறிஸ்துவை நேசிப்போம். என்னில் அன்பு கூருகிறயா? என கேட்கும் இயேசுவை நோக்கி உம்மை நேசிக்கிறேன் என்று சொல்வோமா? அப்படி நேசிக்கும் போது நம் வாழ்வில் விலையேறப்பெற்ற நேரம், தாலந்து, பொக்கிஷங்களை அவர் பாதத்தில் அர்ப்பணிப்போம். அவருக்காக வாழ்வோம். சுவிசேஷம் என்னும் நறுமணம் நம் வீட்டில் மட்டுமல்ல, நாம் வாழ்கின்ற ஊர் முழுவதும், தேசமெங்கும், பார் முழுவதும் பரவப்பட நம்மை அர்ப்பணிப்போம். நாமும் நம் குடும்பமும் இயேசுவை நேசிக்கிற குடும்பமாக கிறிஸ்துவின் நறுமணமாகி சுவிசேஷத்தை சாட்சியாக அறிவிக்கும் குடும்பமாக விளங்குவோம்.

**“வருவாய் தருணமிதுவே அழைக்கிறாரே; வல்ல ஆண்டவர் இயேசுவண்டை”**

ஆமென்! அல்லேலூயா!!

## ஷாலோம் ஜெபக்குழு

**பிரியமானவர்களே,** கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நமது ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்கும் அநேக ஜெபக் குழுக்களை தேவன் தந்துள்ளார். இந்த ஜெபக்குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றமைக்காக தேவனைத் துதிக்கிறோம்.

இதை வாசிக்கின்ற உங்களையும் மாதம் ஒரு முறை கூடி **ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இந்திய தேசத்திற்காகவும்** ஜெபிக்கும்படியாக தேவன் ஏவுவாராகில் உங்கள் பகுதியில் ஒரு ஜெபக்குழுவை ஆரம்பித்து ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். மேலும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்பி வைக்கிறோம். தேவன்தாமே ஜெபத்தின் மூலம் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக! தொடர்புக்கு : 9698044522, 0461 – 2375468, 2377737

## ஷாலோம் ஆதரவாளர்களுக்கு ஓர் அறிவிப்பு

அன்புள்ள ஷாலோம் ஆதரவாளர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் வாழும் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு உணவு, உடை, உறைவிடத்துடன் கல்வி மற்றும் உயர்கல்வியினை அளித்து அவர்கள் சமுதாயத்தில் முன்னேறப் பாடுபடுவதோடு, பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு இலவச மருத்துவச் சேவை மற்றும் இதர சமுதாய முன்னேற்றப் பணிகளை நிறைவேற்றிவரும் **Shalom Charity Mission** க்கு அரசாங்கத்திடமிருந்து **“வருமான வரிவிலக்குச் சான்று”** ***(80G)*** 17.07.2013 முதல் கிடைக்கப் பெற்றுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

சமுதாய முன்னேற்றப் பணி, பீல் ஆதிவாசி சிறுவர் முன்னேற்றப்பணி, மற்றும் மருத்துவ பணிக்குக் காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்கள் இந்த வருமான வரிவிலக்கினை கேட்டுப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

சுதேச ஊழியரின் சாட்சி

# போதகர். பார்த்து டின்டோர்

## போர்குன்டா, இராஜஸ்தான்



எனது பெயர் பார்த்து டின்டோர். நான் இராஜஸ்தானில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் அமைந்துள்ள போர்குன்டா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் இயேசுவை அறியாத பீல் அதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவன். இயேசுவை அறியாத போது சாராயம், பீடி, தம்பாக்கு, சண்டை போடுவது போன்ற பாவங்களுக்கு அடிமையாகவும், அசுத்த ஆவிகளையும் விக்கிரகங்களையும் வணங்கி வந்தேன்.

எனது சித்திக்கு உடல் முழுவதும் வீக்கம் இருந்தது. அதினிமித்தம் 2 வருடங்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். மேலும் எனது குடும்பத்தாரில் இரண்டு வருடத்திற்குள் 4 பேர் வியாதியினிமித்தம் மரித்து விட்டார்கள். அதனால் குடும்பத்தில் சமாதானமில்லாமல் இருந்தது. இந்நிலையில் ஷாலோம் ஊழியர் சந்து டாமோர் அவர்கள் இயேசுவைப் பற்றி கூறினார்கள். எனது சித்தியும் விசுவாசித்தார்கள். ஊழியர் ஜெபித்ததில் எனது சித்திக்கு பரிபூரண சுகம் கிடைத்தது. அதைப் பார்த்த நானும் இயேசுவை விசுவாசித்தேன்.

பின்பு அந்த அற்புதத்தின் மூலம் 1996–ல் இயேசுவை சொந்த இரட்சகராக நாங்கள் குடும்பமாக ஏற்றுக் கொண்டோம். தொடர்ந்து தாத்கட் ஷாலோம் சபைக்குச் சென்று, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தோம். அதன் பின் போதகர்.பாதர் பாரியா அவர்கள் மூலம் ஞானஸ்நானம் பெற்றேன்.

பின்பு ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரம் ஏற்பட்டு, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, ஒரு மாத ஊழியப்பயிற்சி பெற்று, 2005–ல் எனது சொந்த கிராமமாகிய போர்குன்டாவில் 5 குடும்பங்களுடன் ஊழியத்தை தொடங்கினேன். தற்போது 40 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு சபையில் ஆராதித்து வருகிறார்கள். தேவன் எங்களுக்கு 4 பிள்ளைகளைத் தந்துள்ளார். எங்கள் முழுக் கிராமமும் இயேசுவை அறிய வேண்டுமென்ற தரிசனத்துடன் நாங்கள் குடும்பமாக ஊழியம் செய்து வருகிறோம்.

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Mr. Winston John Balasingh J,** Thoothukudi.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 580 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 660 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 250 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2500/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரதமெங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரைத் தாங்குவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

# ஜெபக்குறிப்புகள்...



**பீல் மக்கள் இரட்சிப்பிற்காக...**

◎ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் வாழ்கின்றனர், அவர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

**பணித்தளங்களில் நடைபெற்று வரும் ஊழியங்களுக்காக...**

◎ 660க்கும் அதிகமான சபைகளுக்காக, 303க்கும் அதிகமான ஆலயங்களில் நடைபெற்று வரும் ஆராதனை மற்றும் இதர ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

◎ மூப்பர், பெண்கள், ஊழியர்கள் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

◎ வாலிபர் மற்றும் சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் ஓய்வு நாள் பள்ளிகள், CBC ஊழியங்கள் சிறுவர் மற்றும் வாலிபர் முகாம்களுக்காக ஜெபியுங்கள்.

◎ வெள்ளிதோறும் நடைபெறும் அற்புத சுகமளிக்கும் கூட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

**பேராயர் தேவதாஸ் குடும்பத்திற்காக...**

◎ **பேராயர் தேவதாஸ்** மற்றும் அவரது மனைவி **சகோதரி வஹிதா தேவதாஸ்** ஆகியோருக்காகவும், தேவன் அவர்களுக்கு முழு பீல் மக்களுடைய இரட்சிப்பின் பணியில் தம்முடைய திட்டங்களையும் தரிசனங்களையும் தரவும், அவற்றை செயல்படுத்த நல்ல ஞானத்தையும், சுக, பெலன், ஆரோக்கியத்தினை தரவும், போக்கையும் வரத்தையும் பாதுகாக்கவும் ஜெபியுங்கள்.

◎ Compassion Project மற்றும் Shalom Charity Mission ஆகியவற்றை நிர்வகிக்கும்படியாக பொறுப்பேற்றுள்ள **சகோ. டைட்டஸ்** மற்றும் **மெர்லின்** அவர்களையும், பேராயர் அவர்களின் பேரன் **Zion Kryston** க்காகவும், M.A. (Media) பயின்று வரும் **சகோ. ஷாலோம்** அவர்களையும் தேவன் ஆசீர்வதித்து உருவாக்க ஜெபியுங்கள்.

◎ ரஷ்யாவில் மருத்துவப் படிப்பு பயின்று வரும் சகோதரி ஷெக்கினா அவர்களை தேவன் ஆசீர்வதிக்கவும், படிப்பினை முடித்து பீல் மக்களுக்கு ஆசீர்வாதமாக தேவன் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் ஊழியர்களுக்காக...**

◎ 580 க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்களுக்காகவும் அவர்கள் குடும்பத்திற்காகவும், தேவன் அவர்களை வல்லமையாகப் பயன்படுத்தவும், அவர்கள் தேவைகள் சந்திக்கப்படவும், அவர்களது பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

◎ பீல் ஆதிவாசி சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் சுவிசேஷ ஊழியம், Compassion Project மற்றும் Training Unit –ல் பணிபுரியும் ஊழியர்களுக்காகவும், தேவன் அவர்களுக்கு நல்ல ஞானத்தையும், கிருபையையும் தந்து ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

- ◎ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் பாதுகாவலுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சேரிட்டி மிஷன்...**

- ◎ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக நடைபெறும் பீல் ஆதிவாசி ஜனங்களின் கல்வி, மருத்துவம், குடிநீர் வசதிகளுக்காகவும், பொருளாதார முன்னேற்றப் பணிகளுக்காகவும், நம் ஊழியத்தை செய்கிற தேவ பிள்ளைகளின் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபியுங்கள்.
- ◎ ஷாலோம் விடுதிகளில் தங்கி பயின்றுவரும் 1248க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சிறுவர்களுக்காகவும், அவர்களை தேவன் ஆசீர்வதித்துப் பாதுகாக்கவும், நல்ல ஞானத்தையும், சுகம், பெலனையும் தேவன் சிறுவர்களுக்குக் கொடுக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.
- ◎ Teacher Training, Engineering, Medical & ITI போன்ற உயர்கல்வி கற்கவிருக்கும் பிள்ளைகளுக்காகவும், அவர்களின் கல்வித் தேவைகளை தேவன் சந்திக்கவும் ஜெபியுங்கள்.
- ◎ எதிர்காலத்தில் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு தேவன் நல்ல வேலை வாய்ப்பினைத் தந்து சமுதாயத்தில் உயர்த்தி ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

**ஷாலோம் திருமண்டலத்திற்காக...**

- ◎ ஷாலோம் திருமண்டலத்தின் கீழ் இயங்கி வரும் திருச்சபை பணிகளுக்காக, திருச்சபை ஒருங்கிணைப்பு பணிகளுக்காக ஜெபியுங்கள்.
- ◎ இதுவரை கட்டப்பட்டுள்ள 303 கிராம ஆலயங்களுக்காக, திருச்சபைகள் வளர்ந்து பெருகவும் அநேக ஆத்துமாக்கள் திருச்சபைக்கு வரவும், திருச்சபையில் தேவன் அநேக அற்புத அடையாளங்கள் செய்யவும் ஜெபியுங்கள்.
- ◎ கட்டப்பட்டு வரும் கிராம ஆலயப் பணிகள் தடைகளின்றி நிறைவு பெறவும், ஆலயம் அவசியமாகத் தேவைப்படும் கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்படவும், அதற்கான ஆதரவாளர்கள் கிடைக்கப்பெறவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் மிஷன் ஞாயிறு...**

- ◎ இவ்வருடம் **ஷாலோம் மிஷன் ஞாயிறு** மூன்று மாநிலங்களிலும் கொண்டாட தீர்மானித்து ஜெபித்து செயல்பட்டு வருகிறோம். தேவன் இந்த மிஷன் ஞாயிறை ஆசீர்வதிக்கவும் ஷாலோம் சபைகள் ஸ்திர சபைகளாக, ஜெபிக்கும் சபைகளாக, ஆத்தும ஆதாயம் செய்யும் சபைகளாக, தேவனுக்காக கொடுக்கும் சபைகளாக விளங்க ஜெபியுங்கள்.

**ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப எழுப்புதல் முகாம்...**

- ◎ இந்த வருடம் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் சுதேச ஊழியர் குடும்ப முகாமிற்காக ஜெபியுங்கள். அனைத்து ஊழியர்களும் குடும்பமாக தடையின்றி கலந்து கொள்ளவும், தேவ தாசர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தவும், கால சூழ்நிலைகளை தேவன் சாதகமாக மாற்றித் தரவும், முகாமின் தேவைகளை சந்திக்கவும் ஜெபியுங்கள்.

# ஷாலோம் ஜெப மையம் பிரதிஷ்டை [தாகோத், குஜராத் - 01.09.2015]
## Shalom Prayer Center Dedication



பிரதிஷ்டை செய்யும் பேராயர், வே. தேவதாஸ் அவர்கள்


ஜெப மையத்திற்கான சிறப்பு ஜெபம் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்


பொறுப்பாளர் & ஜெப வீரர்கள்


கூடி ஜெபிக்கும் ஜெப வீரர்கள்


கூடி ஜெபிக்கும் ஊழியர்களும் சபை மூப்பர்களும்


ஜெப மைய பொறுப்பாளர் சகோ. யாக்கூப் பாபோர்

தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி, 24 மணிநேர ஷாலோம் ஜெப மையம் 01–09–2015 அன்று குஜராத் மாநிலம் தாகோத்தில் தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது. தற்போது 12 மணி நேரம் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை ஜெப ஊழியம் நடைபெற்று வருகிறது. இவ்வூழியத்தை நிறைவேற்ற ஒருங்கிணைப்பாளராக சகோ. யாக்கூப் பாபோர் அவர்களும், முழு நேர ஷாலோம் ஜெப வீரர்களாக 6 பேரும் தற்போது நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஒவ்வொரு நாளும் ஜெபிக்கும்படி 2 ஷாலோம் சபை ஊழியர் குடும்பங்கள் மற்றும் மூப்பர்கள் குடும்பத்துடன் ஜெபிக்கிறார்கள்.

ஷாலோம் ஜெப மையத்தில் குறிப்பாக தேசத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், பீல் மக்களின் இரட்சிப்பிற்காகவும் ஊழியர்களுக்காகவும், அவர்களின் குடும்பத்திற்காகவும் அனைத்து சபைகளுக்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது. குறிப்பாக கிராமங்கள் மற்றும் தாலுகாக்களின் பெயர்களை சொல்லி ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது. ஜெப உதவிக்காக தொலைபேசியில் அழைக்கும் விசுவாசிகளுக்காக 24 மணி நேரமும் ஜெப ஊழியம் நடைபெற்று வருகிறது.

## தூத்துக்குடி வட்டார போதகர்களுக்கான சிறப்புக் கூடுகை - 20.08.2015



தேவ செய்தி : பிஷப். வே. தேவதாஸ் அவர்கள்
பணித்தள செய்தி : சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்



ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்கும் போதகர்கள்

## ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை & 25வது ஆண்டு ஸ்தோத்திரக் கூடுகை - 23.08.2015



கூடியிருந்தத தேவ ஜனங்கள்



தேவ செய்தியளிக்கும் பேராயர். வே. தேவதாஸ் அவர்கள்



கூடுகையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஊழியர்கள்




பேராயர். வே. தேவதாஸ் அவர்கள் குடும்பத்திற்காக சிறப்பு ஜெபத்தினை ஏறெடுக்கும் Rev. சாமுவேல் ஜெபசீலன் அவர்கள்

## மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை - 23.08.2015, IPC சபை, தூத்துக்குடி



சுதேச ஊழியரின் சாட்சி வேளை



பிரதிஷ்டை செய்யப்படும் சுதேச ஊழியர்

# ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை & 25வது ஆண்டு ஸ்தோத்திரக் கூடுகை

தேவனுடைய பெரிதான கிருபையினால், **ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை & 25 வது ஆண்டு ஸ்தோத்திரக் கூடுகை** தூத்துக்குடியில் 23.08.2015 அன்று A.S.K.R. திருமண மஹாலில் வைத்து மிகவும் சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார்.

**Rev. Winfred** அவர்கள் ஜெபிக்க கூட்டம் இனிதே ஆரம்பமானது. அதன்பின் **சகோ. ராஜமாணிக்கம்** & **சகோ. சுந்தர்சிங்** ஆகியோர் இசை மீட்ட **சகோ. ஆராக்கியராஜ்** அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை வேளையை இனிதே நடத்தினார்கள். அதன்பின் ஷாலோம் பணித்தளங்களிலிருந்து வந்திருந்த மிஷனெரிகள் தங்களது அனுபவ சாட்சிகளைப் பகிர்ந்து கொண்டனர். அதன்பின்னர் **சகோ. ஜெபராஜ்** (இயேசு சுகமளிக்கிறார் ஊழியங்கள்) அவர்கள் தலைமையில் சுதேச ஊழியர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். அதன்பின் ஊழியர்களைத் தாங்கும் குடும்பத்தினர் மேடைக்கு அழைக்கப்பட்டு அவர்களுக்கான சிறப்பு ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது.

**சகோ. சாம் குணசீலன்** & **சகோ. டைட்டஸ்** இருவரும் இணைந்து வீடியோ படக் காட்சிகள் மூலம் ஷாலோம் ஊழியங்களை காண்பித்தனர். அதன்பின்னர் **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் பணித்தள காரியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டார்கள். பின்னர் ஷாலோம் தலைமை அலுவலக பெண் ஊழியர்கள் மூலம் Choreography நடனம் நடத்தப்பட்டது. அதன்பின்னர் **சகோ. ஜெபராஜ்** அவர்கள் ஷாலோம் ஊழியர்களுக்காகவும், பிரதிநிதிகளுக்காகவும் ஜெபிக்க, **Rev. சாமுவேல் ஜெயசீலன்** அவர்கள் பேராயர் அவர்கள் குடும்பத்திற்காக ஜெபித்தார்கள். பின்னர் பேராயர் **வே. தேவதாஸ்** அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். பின்னர் **Pr. கனகராஜ்** அவர்கள் முடிவு ஜெபத்தை ஏறெடுக்க பேராயர் அவர்கள் ஆசீர்வாதம் கூற கூட்டம் நிறைவேறிற்று. கூட்டத்தின் நிகழ்ச்சிகள் அனைத்தையும் **சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ்** அவர்கள் தொகுத்து வழங்கினார்கள்.

கூட்டத்தில் தேவ பிள்ளைகள் திரளாக கலந்துக் கொண்டனர். கூட்டம் நடந்த இடம் முழுவதையும் பரிசுத்த ஆவியானரின் பிரசன்னம் மூடியிருந்ததை உணரமுடிந்தது. அநேகர் ஷாலோம் ஊழியங்களைத் தாங்கவும் ஊழியங்களுக்காக ஜெபிக்கவும் தங்களை அர்ப்பணித்தனர். கூட்டங்களுக்காக ஜெபித்த, உழைத்த, கொடுத்த அனைவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். **தேவனுக்கே மகிமை!**

**பிரதிஷ்டை செய்யப்பட்ட ஊழியர்கள் மற்றும் ஆதரவாளர்களின் விபரங்கள்**

| | ஊழியர் | பணித்தளம் | தாங்குவோர் |
|---|---|---|---|
| 1. | சகோ. ரமேஷ் K. டாமோர் | பேடவ் துலியா, இராஜஸ்தான் | சகோ. அகஸ்டின், தூ–டி. |
| 2. | சகோ. விஜய புரியா | போரடி, குஜராத் | Dr. பிரமிளா தேவி, தூ–டி. |
| 3. | சகோ. சாமுவேல் டாமோர் | டுங்ரி, குஜராத் | Pr. டேனியல் ஆஸ்பார்ன்,<br>நல்ல சமாரியன் ஐக்கியம், சென்னை |
| 4. | சகோ. நவலேஷ் K. தாவார் | பிப்ளியா, மத்தியப்பிரசேம் | சகோ. பீட்டர் கிறிஸ்டியன், தூ–டி. |
| 5. | சகோ. சுவால் G. டாமோர் | பாகோர் – நானிவா, ம.பி. | சகோ. ராஜகுமார், தூ–டி. |
| 6. | சகோ. கேசர் சிங் | சஜ்வானி சோட்டி, ம.பி. | தேவ கிருபை டிரேடர்ஸ், தூ–டி. |

# தூத்துக்குடி வட்டார போதகர்களுக்கான சிறப்புக் கூடுகை - 20.08.2015

தேவனுடைய பெரிதான கிருபையினால், தூத்துக்குடி வட்டார போதகர்களுக்கான சிறப்புக் கூடுகை 20.08.2015 அன்று தூத்துக்குடி, பெல் ஹோட்டலில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. காலை 10.00 மணிக்கு **Pr. அன்டோ** அவர்கள் ஜெபிக்க கூட்டம் ஆரம்பமானது. அதைத் தொடர்ந்து **சகோ. சாம் அர்னால்டு** அவர்கள் பாடல் & ஆராதனை வேளை நடத்த **சகோ. ராஜமாணிக்கம்** அவர்கள் இசை மீட்டினார்கள். அதைத் தொடர்ந்து **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் போதகர்கள் குடும்பங்களை வரவேற்றார்கள்.

அதைத் தொடர்ந்து சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் பணித்தளங்களைக் குறித்த காரியங்களைப் பகிர்ந்து கொள்ள, **சகோ. சாம் குணசீலன்** & **சகோ. டைட்டஸ்** இருவரும் இணைந்து பணித்தள வீடியோ படக்காட்சிகளைக் காண்பித்தனர். பின்னர் **Pr. ராஜேஸ்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்க, **Rev. சாமுவேல் ஜெயசீலன்** அவர்கள் காணிக்கைக்கான சிறப்பு ஜெபத்தினை ஏறெடுத்தார்கள். அதைத் தொடர்ந்து **Pr. எட்வர்ட் சாம்ராஜ்** அவர்கள் பேராயர் அவர்கள் குடும்பத்திற்காக ஜெபித்தார்கள்.

**பேராயர் வே. தேவதாஸ்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களின் 25வது ஆண்டு சிறப்புத் திட்டங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டதோடு, தேவனுடைய வார்த்தையையும் பகிர்ந்துக் கொண்டார்கள். அதைத் தொடர்ந்து **சகோ. பிரேம் குமார்** அவர்கள் நன்றியுரை ஏறெடுக்க, பேராயர் அவர்கள் ஜெபித்து ஆசீர்வாதம் கூற கூட்டம் நிறைவேறிற்று.

கூட்டத்தில் அநேக போதகர்கள் குடும்பமாக பங்கு பெற்றனர். அநேகர் ஷாலோம் ஊழியங்களைத் தாங்கவும் ஊழியங்களுக்காக ஜெபிக்கவும் தங்களை அர்ப்பணித்தனர். கூட்டங்களுக்காக ஜெபித்த, உழைத்த, கொடுத்த அனைவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். **தேவனுக்கே மகிமை!**

---

## மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை – 23.08.2015
## IPC சபை, தூத்துக்குடி.

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 23.08.2015 ஞாயிற்றுக்கிழமை தூத்துக்குடி IPC சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் சுதேச ஊழியர் **சகோ. ரமேஷ் K. டாமோர்** அவர்கள் சபை போதகர் **Pr. ஜெயபாலன்** அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டார். இதில் ஊழியர் தனது சாட்சியை பகிர்ந்துக் கொள்ள **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழியாக்கம் செய்தார்கள். கலந்துக் கொண்ட ஊழியர்கள் பீலி மொழியில் பாடல் பாடினார்கள். அதன்பின் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்துக் கொண்டார்கள். மேலும் நமது ஷாலோம் சுதேச ஊழியர்கள் இரண்டு பேர் கலந்துக் கொண்டு தங்களது அனுபவ சாட்சிகளைப் பகிர்ந்து கொண்டனர். **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் **Pr. ஜெயபாலன்** அவர்களுக்காகவும் ஊழியரைத் தாங்க முன்வந்த **சகோ. அகஸ்டின்** அவர்கள் குடும்பத்திற்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். **தேவனுக்கே மகிமை!**

# SHARING LOVE MISSION

**Shalom**

# அன்பு பகிர்வு இயக்கம்

**பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி தரிசன பணி**



பீல் ஆதிவாசி ஜனங்கள்

## ஷாலோம்

**ஊழியப்பாதையில்**
**தேவ கிருபையினால்**

**25 வது ஆண்டுமலர்**

**சிறப்பு ஊழிய திட்ட அறிக்கை**

**1000 பீல் சுதேச ஊழியர்கள் ஷாலோம் கிராம சபைகள்**



பீல் மக்களுக்காக இராஜஸ்தானில் கோய்கா கிராமத்தில்
கட்டப்பட்டுள்ள ஷாலோம் பேராலயம்

*"...நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை."*

– பரி. பவுல். (அப். 26:19)

## சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களிடமிருந்து....



### *இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!*

ஷாலோம் ஊழியத்தை 25 வருடங்களாக எனக்குத் தெரியும். இது தேவ தரிசனத்தின்படி ஆரம்பிக்கப்பட்ட ஊழியம். ஆவியானவரின் வழிநடத்துதல்படி நடத்தப்படும் ஊழியம். ஆகவே தான் **25 வருடத்திற்குள்** இந்த பீல் ஆதிவாசி மக்கள் மத்தியிலேயே **580 பீல் ஆதிவாசி ஊழியர்கள் எழுப்பப்பட்டு,** அவர்கள் மூலமாக **660 கிராமங்களில் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு, பல்லாயிரம் பீல் ஆதிவாசிக் குடும்பங்கள் தேவனண்டையில் வழிநடத்தப்பட்டுள்ளார்கள்.** கர்த்தர் எழுப்பியிருக்கிறார். மூன்று மாநிலங்களிலும் மூன்று திருமண்டலங்கள் உருவாகுமளவிற்கு தேவன் ஆசீர்வதித்திருக்கிறார்.

இதற்கு காரணம் தேவனால் அழைக்கப்பட்ட, தேவ தரிசனம் பெற்ற தேவ மனிதர் **பேராயர் தேவதாஸ்** அவர்களும், அவர்கள் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களும். இவர்களின் தியாகமான அர்ப்பணிப்பும், ஆத்தும பாரமும் தேவனைக் கவர்ந்துக் கொண்டது. ஆகவே தான் இந்த ஊழியத்திற்கு நீ உதவியாயிருக்க வேண்டும் என்று ஆண்டவர் என்னோடு பேசினார்.

கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து இந்த ஷாலோம் ஊழியத்தோடு நாங்கள் இணைந்து நிற்கிறோம். நீங்களும் இந்த ஊழியத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறீர்கள். இந்த 25வது வருடத்தில் பல ஊழியத் திட்டங்களை நிறைவேற்றும்படி ஆவியானவர் திருவுளம் பற்றியிருக்கிறார். இந்த தேவத் திட்டங்களை நிறைவேற்றி முடிக்க உங்கள் ஜெபமும், உதவியும் தேவை. 250 கிராம ஆலயங்கள் கட்டப்பட வேண்டும்! குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தானில் பேராலயம், ஊழியர் பயிற்சிக் கூடம், பணித்தள அலுவலகங்கள், பள்ளிக்கூடங்கள் கட்டப்பட வேண்டும். இந்த தேவத் திட்டங்களை நிறைவேற்றி முடிக்க **ரூ. 1 லட்சம் கொடுக்கக்கூடிய 300 ஆதரவாளர்கள் தேவை.**

- ❖ உங்கள் குடும்பத்தின் சார்பிலோ அல்லது சபையின் சார்பிலோ பீல் மக்கள் மத்தியில் ஒரு ஆலயம் கட்டிக் கொடுக்க முன் வரலாம்.
- ❖ ரூ. 1 லட்சம் கொடுக்கக்கூடிய 300 பேரில் நீங்களும் ஒருவராயிருக்கலாம்.
- ❖ உங்களால் முடிந்த காணிக்கைகளை மேற்கண்ட திட்டங்களுக்கு கொடுத்து ஊழியங்களை ஜெபித்துத் தாங்கலாம்.

**“தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டுகிற இந்த ஊழியத்திற்குக் கொடுக்கிற உங்களை கர்த்தர் ஆயிரம் மடங்காக ஆசீர்வதிப்பார்”**

**ஜெபிப்போம் ! .... செயல்படுவோம் !! ...... தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டுவோம்!!! கிருபை உங்களோடிருப்பதாக!**

உங்கள் சகோதரன்,

Mohan C.L.

(சகோ. மோகன் சி. லாசரஸ்)

**நோக்கம் :** பாரத தேசத்தில் சுமார் 7000 கிராமங்களில் ஒரு கோடி மக்கள் தொகை உள்ள பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நம் தலைமுறையில் சுவிசேஷம் அறிவித்து கிறிஸ்துவின் திருச்சபையைக் கட்டுவதாகும்.

**பீல் மக்கள் கலாச்சாரம் :** பீல் என்ற வார்த்தை திராவிட மொழியிலிருந்து மருவி "வில்" என்னும் பொருள் கொண்டது. ஒவ்வொரு வீட்டிலும் வில், அம்பு, வாள் இவைகளை வைத்திருப்பார்கள். இவை வேட்டையாட அல்ல, திருடவும், கொள்ளையிடவும், சண்டையிடவும், தங்களைப் பாதுகாக்கவுமே பயன்படுத்துகிறார்கள்.

பீல் ஆதிவாசி மக்கள் சிறு கிராமங்களிலும், மலைப்பாங்கான குன்றுகளிலும், சிறிய குடிசைகள் அமைத்து அதைச் சுற்றிலும் உள்ள தங்கள் நிலத்தில் மக்காச்சோளத்தைப் பயிரிடுகின்றனர். இவர்கள் மக்காச்சோள ரொட்டிகளை எண்ணெயும் உப்பும் இல்லாமல் சுட்டு, கிடைக்கும் காய்கறிகளுடன், காரமான இஞ்சி, மிளகாய், பூண்டுகளைச் சேர்த்து உண்பார்கள். மௌவா என்ற பூவிலிருந்து சாராயத்தைக் காய்ச்சி, விற்றும் குடித்தும் வருகிறார்கள்.


குடும்பமாக சாராயம் காய்ச்சப் பீல் ஆதிவாசி ஜனங்கள்

பீல் மக்கள் மழையை நம்பி வாழ்கிறவர்கள். மழை பெய்யாவிட்டால் விவசாயம் செய்ய முடியாமல் பிழைப்பிற்காக கூலி வேலை செய்ய பெரிய நகரங்களுக்குச் சென்றுவிடுவார்கள். பெரும்பாலான கிராமங்களில் போக்குவரத்து, மின்சாரம், குடிநீர், மருத்துவம், பாடசாலை, போன்ற அடிப்படை வசதிகள் கூட கிடையாது. பிலோடி என்னும் எழுத்து வடிவில்லா மொழி பேசுகிறார்கள். இறந்த ஆவிகளையும் குலதேவதைகளையும் வழிபட்டு வருகிறார்கள். எல்லா வீடுகளிலும் பில்சூனியக் கட்டுகளும், பிசாசின் பிடிகளும் உண்டு. மந்திரவாதியை தெய்வமாகவும், குருவாகவும் நம்பி வாழ்கிறவர்கள். அந்தகாரத்தில் வாழும் இவர்கள் இந்தத் தலைமுறையில் இயேசு கிறிஸ்துவின் அன்பினை ஒரு முறை கூட கேள்விப்படாதவர்கள்.

**கல்வி பள்ளிக்கூட வசதி :** கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் அதிகம் இல்லாததால் கல்வி அறிவு மிகவும் குறைவாக உள்ளது. அப்படியே சில இடங்களில் பள்ளிகள் இருந்தாலும் சரியானபடி கல்வி கற்றுக் கொடுப்பதில்லை. மேலும் உள்ளடங்கிய பெரும்பாலான கிராமங்களில் உள்ள திருடர்கள் மற்றும் குடிகாரர்களின் நிமித்தமாக பயந்து அங்குள்ள பள்ளிக் கூடங்களுக்கு ஆசிரியர்கள் ஒழுங்காக வருவது கிடையாது. கிராமங்களில் ஆசிரியர்கள் சரியாக மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்காததால் பீல் மக்களுக்கு எழுத, வாசிக்க, எண்ண தெரியாது.


அழுக்குக் குட்டையில் இருந்து குடிக்க தண்ணீர் எடுக்கும் பெண்

**குடிநீர் வசதி :** பல நூற்றுக்கணக்கான கிராமங்களில் பரந்து வாழும் பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு நல்ல குடிநீர் வசதி கிடையாது. ஆழ் குழாய் குடிநீர் வசதி இருந்தாலும் அதிக தூரமாக இருக்கும். கோடை காலங்களில் வெகு தூரம் நடந்துச் சென்று நதி ஓரங்களில் குழியைத் தோண்டி அதில் வரும் தண்ணீரைக் குடிக்க பயன்படுத்துவார்கள்

## அழைப்பும் தரிசனமும்

**பேராயர். தேவதாஸ்** அவர்கள் சிவகாசி பட்டணத்தில் நல்ல பக்தியுள்ள கிறிஸ்துவக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தார். வாலிப வயதில் இவ்வுலகத்தில் உண்மையான அன்பும், சமாதானமும் கிடைக்கப் பெறாமல் தன் உயிரை மாய்த்துக் கொள்ள எண்ணினார். கோவை பட்டணத்தில் ஒரு ஆவிக்குரிய சபையில் மாலை ஆராதனையில் கல்வாரி அன்பே உலகத்தில் மேலான அன்பு என்ற நற்செய்தியைக் கேட்டு அர்ப்பணித்த போது சிலுவைக் காட்சியை கண்டார். அற்புத சுகம் பெற்று, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டார். அந்த ஆராதனையில் தேவதாஸ் என்று பரிசுத்த ஆவியானவர் பெயர் சொல்லி அழைத்து, உன்னை ஒரு ஜாதி மக்களுக்கு அப்போஸ்தலனாக அனுப்பி, அவர்களுக்கு ஆசீர்வாதமாக உன்னைப் பயன்படுத்துவேன் என்று 19வது வயதில் திருவுளம் பற்றினார். 1981ம் ஆண்டு 21ம் வயதில் ஊழிய அழைப்பைப் பெற்று நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் 5 வருடங்கள் வட இந்தியாவில் பணியாற்றினார்.

**சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் நாசரேத் ஊரைச் சார்ந்தவர். அவர் தனது வாலிப வயதில் படித்து முடித்து, நல்ல வேலையில் சேர்ந்து பணம் சம்பாதித்து குடும்பப் பொறுப்புகளை எடுக்க வேண்டிய சூழ்நிலையில் **"யார் என் காரியமாய் போவான்"** என்ற தேவ குரலுக்கு தன்னை ஒப்புக்கொடுத்து இந்திய மிஷனெரி சங்கத்தில் 1983 முதல் ஒரிசாவில் மல்கன்கிரி பணித்தளத்தில் மிஷனெரியாக பணியாற்றினார்கள்.



தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி 1985ம் வருடம் ஜுலை 8ம் நாள் திருமணத்தில் இணைக்கப்பட்ட இவர்கள் முதல் வாரத்தில் கூடி தங்கள் சாட்சிகளை பகிர்ந்துக் கொண்டு ஜெபித்த வேளையில் தேவன் கைகளில் வில் அம்பு வைத்த பீல் ஆதிவாசி மக்களைக் காண்பித்து இந்த ஜாதி மக்களைத்தான் உங்களுக்குத் தருவேன் என தரிசனம் தந்தார். இந்திய மிஷனெரி சங்கத்தின் மூலம் 1985 – 1990 வரை வல்லமையாக பீல் மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவித்து சபைகளை ஸ்தாபிக்க ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தந்தார்.

1991ம் ஆண்டு ஜுலை முதல் பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலின்படி இரு மிஷனெரி ஸ்தாபனத்தில் 10 வருட உண்மையான தொண்டின் அனுபவத்துடன் முழு பீல் மக்கள் இரட்சிப்பின் திட்டத்திற்காக தேவன் தந்த அழைப்பின்படி குஜராத்தில் ஜாலோத் என்ற பணித்தளத்தில் கிடைத்த பேய் பங்களாவில் பழைய சைக்கிள் ஒன்றைப் பயன்படுத்தி நற்செய்தி பணியை செய்ய SHARING LOVE MISSION (அன்பு பகிர்வு இயக்கம்) உருவாக்கி செயல்படுத்த தேவன் கிருபை செய்தார்.



பேய்வீடு என்று அழைக்கப்பட்ட வீடு

ஆரம்ப நாட்களில் ஊழியத்தில் பலவிதமான சோதனைகள், கஷ்டங்கள், பிரச்சனைகள் மத்தியில் குறிப்பாக, மூன்றாவதாகப் பிறந்த குழந்தை ஷாரோன் நோய்வாய்ப்பட்ட போது சரியான மருத்துவ வசதி கிடைக்கப் பெறாமல் அந்தக் குழந்தையை இழக்க நேரிட்டது. கோதுமை மணியாக தேவன் பீல் மக்கள் பூமியில் விழும்படியாக கிருபை தந்தார்.

கிடைத்த பேய் பங்களாவில் ஆரம்பித்த சிறிய சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்துக் கொண்ட இரண்டு ஆதிவாசி குடும்பங்கள் இயேசுவின் நாமத்தில் பிசாசின் பிடியிலிருந்தும், நோய் கட்டிலிருந்தும் அற்புத விடுதலைப் பெற்றார்கள். அவர்கள் சாட்சியின் மூலமாக 20 பேர், 40 பேர்கள் என வாரக்கூட்டத்தில் கலந்துக் கொண்டவர்கள் பெற்றுக் கொண்ட அற்புத சாட்சிகள் மூலம் 500 பேர்களுக்கு மேலாகக் கூடிவர ஆரம்பித்தார்கள்.

**பீல் சுதேச ஊழியர்கள் :**

7000 க்கும் அதிகமான கிராமங்களில் வாழும் சுமார் 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படவும், இரட்சிக்கப்படவும் தேவன் தமிழ்நாட்டிலிருந்து அல்ல, பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களையே எழுப்ப பாரம் தந்தார். ஒரு மாத வேதாகம மற்றும் ஊழியப் பயிற்சி கொடுத்து சொந்தக் கிராமங்களில் ஊழியம் செய்ய பீல் சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தந்தார். தேவ கிருபையால் இதுவரை 580 பீல் ஆதிவாசி சுதேச ஊழியர் குடும்பங்களை பயிற்சி கொடுத்து எழுப்ப தேவன் கிருபை தந்துள்ளார். பயிற்சி பெற்று பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட பீல் சுதேச ஊழியர்கள் மூலமாக தேவன் பலத்த அற்புத அடையாளங்களை நடப்பித்து சுமார் 660 கிராமங்களில் சபைகளை ஸ்தாபிக்கவும், பல்லாயிர பீல் ஆதிவாசி குடும்பங்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும் கிருபை தந்துள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக !

## ஷாலோம் திருச்சபை வளர்ச்சிப் பணிகள்

- ❖ மாதந்தோறும் 580 பீல் சுதேச ஊழியர்களுக்கான சிறப்பு கூடுகை.
- ❖ வருடந்தோறும் 5000 சபை மூப்பர்களுக்கு முகாம்கள்.
- ❖ வருடந்தோறும் 10,000 சிறுவர்களுக்கான சிறப்பு முகாம்கள்.
- ❖ பிராந்தியங்கள் வாரியாக பெண்கள் எழுப்புதல் முகாம்கள்.
- ❖ 400 சபைகளில் ஓய்வுநாள் பாடசாலை.
- ❖ 40,000 சிறுவர்களுக்கான 10 நாட்கள் விடுமுறை வேதாகமப் பள்ளி.
- ❖ வருடந்தோறும் 580 பீல் சுதேச ஊழியர் குடும்ப அக்கினி முகாம்.
- ❖ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக 2000க்கும் அதிகமான பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு கல்வி உதவிப் பணி.
- ❖ ஷாலோம் ஜெப மையம்.
- ❖ ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை ஊழியங்கள்.
- ❖ 300க்கும் அதிகமான கிராமங்களுக்கு குடிநீர் வசதி.
- ❖ வருடந்தோறும் சுமார் 10,000 வேதாகமங்கள் வழங்குதல்.
- ❖ மாதந்தோறும் 48 இடங்களில் அற்புத சுகமளிக்கும் நற்செய்திக் கூட்டங்கள்.
- ❖ 600க்கும் அதிகமான கிராமங்களில் ஆலய ஆராதனை.
- ❖ ஆவிக்குரிய புத்தகங்கள், CD, DVD போன்ற இலக்கிய சேவை.
- ❖ 1 கோடி பீல் மக்களின் இரட்சிப்பிற்–காகவும், தேசத்திற்காகவும் ஜெபிக்க
- ❖ ஷாலோம் திருமண்டல பணிகள் மற்றும் தரிசனத் தலைவர்களை உருவாக்குதல்.
- ❖ வருடந்தோறும் 10 ஆயிரத்திற்கும் அதிகமான வேதாகமங்களை குறைந்த விலையில் வழங்குதல்
- ❖ மற்றும் பல எழுப்புதல் பணிகள்.

## ஷாலோம் பணித்தளங்களில் கட்டப்பட்டுள்ள 303 கிராம ஆலயங்களில் சில


பாரேவா கிராம ஆலயம், குஜராத்


பாட்டன் புரா கிராம ஆலயம், குஜராத்


கர்வாணி கிராம ஆலயம், குஜராத்


டும்ரட் கிராம ஆலயம், இராஜஸ்தான்


பாடிவசோடி கிராம ஆலயம், இராஜஸ்தான்


தான் ரி கிராம ஆலயம், இராஜஸ்தான்


உதம்பூரா கிராம ஆலயம், ம.பி.


காளாகேத் கிராம ஆலயம், மத்தியப்பிரதேசம்


ரூப்பாகேடா கிராம ஆலயம், மத்தியப்பிரதேசம்

# ஷாலோம் கிராம ஆலயங்கள்

தேவ கிருபையால் பீல் சுதேச ஊழியர்கள் மூலமாக உருவாக்கப்பட்ட 660 கிராம சபைகளில் வாரந்தோறும் ஆராதனைகள் மற்றும் உபவாச ஜெபம், அற்புத விடுதலைக் கூட்டங்கள் தவறாது நடைபெற்று வருகிறது. சுதேச ஊழியர்கள் தங்கள் கிராமத்தில் தங்கள் சொந்த நிலங்களை கொடுக்க முன்வருகிறார்கள். 25 குடும்பங்கள் விசுவாசிகளாகவும், சபைகளில் 7 மூப்பர்கள் உருவாக்கப்பட்ட பின்பு, அர்ப்பணிக்கப்பட்ட நிலத்தில் ஷாலோம் ஊழியத்தின் சார்பில் 35x20, 40x20, 50x20 அளவுகளில் முறையே **ரூ. 2 இலட்சம், ரூ. 3 இலட்சம், ரூ. 5 இலட்சம்** மதிப்புகளில் தளவாடப் பொருட்கள் வாங்கிக் கொடுக்கப்படுகிறது. அவர்களே கட்டுமான பணிகளுக்கு உதவி செய்து கட்டி எழுப்பி உள்ளார்கள். இதுவரை தேவ கிருபையால் **303 கிராம ஆலயங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.** இந்த வெள்ளிவிழா ஆண்டிற்குள் **(2015 – 2016) இன்னும் 250 கிராமங்களில்** உடனடியாக ஆலயங்கள் கட்டப்பட வேண்டும். **தேவனுக்கே மகிமை!**

**2016 ஆம் ஆண்டிற்குள் பணித்தளங்களில்**
**250 கிராம ஆலயங்கள் கட்டியெழுப்பப்பட ஜெபியுங்கள்!**
**ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்.**

**"...ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன்..." ஆகாய் 1 : 8**



ஷாலோம் திருமண்டலம் துவக்கவிழா - 20.11.2009

போதகர்களாக அபிஷேகம் பண்ணப்பட்ட 77 பீல் சுதேச ஊழியர்களுடன்
சகோ. மோகன் சி. லாசரஸ் மற்றும் பேராயர் வே. தேவதாஸ்



Allahabad Bible Seminary - ல் தொலை தூரக் கல்வி மூலம்
B.T.S., (Bachelor of Theological Studies) படித்து முடித்து பட்டம் பெற்ற
நமது ஷாலோம் பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்கள்







**பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதப்புத்தகங்கள்**

ஒவ்வொரு பீல் ஆதிவாசி குடும்பங்களுக்கும் குறைந்த விலையில்
ஒவ்வொரு வருடமும் குறைந்தது 10 ஆயிரம் வேதாகமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

# ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெறும் சமுதாய முன்னேற்றப் பணிகள்





**பீல் ஆதிவாசி சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் கல்விப் பணிகள்**







**ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை மூலம் நடைபெறும் மருத்துவப் பணிகள்**





**CBH ஸ்தாபனத்துடன் இணைந்து 200க்கும் அதிகமான பீல் ஆதிவாசி கிராமங்களில் ஆழ்துளாய் கிணறுகள் மூலம் குடிநீர் வசதி**

25 வது ஆண்டில்

# ஷாலோம் ஊழிய வெள்ளிவிழா ஆண்டு
## சிறப்பு பணிகளும் திட்டங்களும்

தேவ கிருபையால் இந்த 25ம் வெள்ளிவிழா ஆண்டில் அனைத்து 580 பீல் சுதேச ஊழியர்கள் ஆளுக்கொரு புதிய சுதேச ஊழியர்களை எழுப்பவும்; ஒரு புதிய சபையை உருவாக்கவும்; ஒவ்வொரு சபையில் உள்ள விசுவாசி குடும்பங்கள் குறைந்தது 4 குடும்பங்களை இயேசுவண்டை வழி நடத்தவும் தீர்மானித்து ஜெபித்து செயல்பட எங்களுடன் அர்ப்பணித்து உள்ளார்கள். ஆகவே 25ம் வெள்ளி விழா ஆண்டு முடிவடையும் போது 2016 இறுதிக்குள் 1000 பீல் சுதேச ஊழியர்கள்; 1000 கிராம சபைகள் மற்றும் ஒரு இலட்ச விசுவாச குடும்பங்களை தேவ நாமம் மகிமைப்பட பெற்றுக் கொள்வோம் என விசுவாசிக்கிறோம். ஆகவே இந்த ஆண்டின் ஊழியங்களுக்காக, சிறப்புத் திட்டங்களுக்காக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.


சுவிசேஷத்திற்கு செவிசாய்க்கும் பீல் ஆதிவாசி ஜனங்கள்

## வெள்ளி விழா ஆண்டு சிறப்பு கட்டிடப் பணி திட்டங்கள்

### ஷாலோம் பவன், தாகோத் – குஜராத். (Shalom Bhavan, Dahod - Gujarat)

தேவ கிருபையால் உருவாக்கப்பட்ட 25 வருட பணிகளை நிர்மானிக்கவும் செயல்படுத்தவும் குஜராத்தில் தாகோத்தில் பணித்தள அலுவலகம் உள்ளது. இந்தக் கட்டிடம் சுமார் 3600 சதுர அடி நிலத்தில் 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டிடமாகும். இதை உடைத்து விட்டு, கீழ்க்காணும் அனைத்து துறைகளும் (Departments) ஒருங்கிணைந்து செயல்பட ஷாலோம் பவன் கட்டிடத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.



ஷாலோம் பவன் மாதிரிப்படம்

- ❖ 3 மாநில திருச்சபைகளின் ஒருங்கிணைப்புப் பணி (Shalom Diocese / Synod Network)
- ❖ சபை வளர்ச்சிக்கான அனைத்துப் பயிற்சிகளின் திட்ட மையம் (Training Unit)
- ❖ ஊழியர் பயிற்சி, வேதாகமப் பயிற்சி, ஓய்வுநாள் பள்ளி மற்றும் VBS பயிற்சிகள்.
- ❖ நிதித்துறை வளர்ச்சி. (Finance Department Audio / Video Studio & Recording Centre.
- ❖ தகவல் தொடர்புத் துறை. (Communication – மாத பத்திரிகை, மாத அறிக்கை, ஆலய அறிக்கை, சுதேச ஊழியர் அறிக்கை & மாணவர்கள் அறிக்கை)
- ❖ பீல் மக்களுக்காகவும், தேசத்திற்காகவும் 24 மணி நேரமும் ஜெபிக்க ஷாலோம் ஜெப மையம்.
- ❖ Conference Hall – குறைந்தது 100 பேர்கள் கூடி ஜெபித்து திட்டமிட.
- ❖ Literature, CD/ VCD, வசன அட்டைகள் மற்றும் ஆலயத்திற்குத் தேவையான பொருட்களை விற்கக்கூடிய இலக்கிய சேவை பிரிவு.
- ❖ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெறும் கல்விப்பணி, மருத்துவப் பணி மற்றும் சமுதாய முன்னேற்றப் பணிகளுக்கான அலுவலகம்.
- ❖ Sponsor Related Department. ❖ Car & Two Wheeler Parking வசதி.
- ❖ பேராயர் மற்றும் பேராயர் அம்மா அவர்களுக்கான அலுவலக அறைகள்.
- ❖ மேலும் இதர பணிகள்....

## ஷாலோம் பேராலயம், அந்தர்வேலியா – மத்தியப்பிரதேசம்


இந்நாட்களில் மத்தியப்பிரதேசத்தில் பீல் மக்கள் மத்தியில் எழுப்புதலை கட்டளையிட்டு வருகிறார். ஊழியர்கள் கூடுகை, மூப்பர்கள் கூடுகை, வாலிபர் கூடுகை, சிறுவர்கள் முகாம், எழுப்புதல் முகாம்கள், ஜெபமுகாம்கள் மற்றும் பகுதிவாரிய திட்டக் கூடுகைகளை நடத்த அந்தர்வேலியா கிராமத்தில் தேவன் நமக்கு சுமார் 2 ஏக்கர் நிலத்தை தந்துள்ளார். அங்கு 120 X 40 அளவில் Hall ஒன்றும் மேலும் தேவையான அறைகள் கட்டப்பட Compound wall கட்டப்பட இரண்டு ஊழியர்கள் தங்கியிருக்க, ஜெப ஊழியங்கள் நடத்தப்பட கட்டிடங்கள் வேண்டும்.



## ஷாலோம் மிஷன் பள்ளி மற்றும் விடுதி, பிஜல்பூர் – இராஜஸ்தான்

தேவ கிருபையால் 30 பிள்ளைகளுடன் சிறிய வீட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஷாலோம் பள்ளி இன்று இராஜஸ்தானில் பிஜல்பூர் கிராமத்தில் 1 முதல் 8 வரை வகுப்புகள் நேர்த்தியாக நடைபெற்று வருகிறது. குறிப்பாக நம் இராஜஸ்தான் ஊழியர்கள், மூப்பர்கள் பிள்ளைகள் 300க்கும் அதிகமாக படித்து வருகிறார்கள்.

கட்டப்பட்ட சிறிய அறைகளில் தான் பள்ளி வகுப்புகள் உள்ளது. பகலில் வகுப்பறையாகவும் இரவில் தங்கும் அறையாகவும் உபயோகித்து வருகிறார்கள். வெள்ளிவிழா ஆண்டில் பள்ளிக்கூடத்துக்கு 10 அறைகள் மற்றும் 100 பெண் பிள்ளைகளுக்கான விடுதி அறைகள் கட்டப்பட வேண்டும்.



ஷாலோம் மிஷன் பள்ளி மாதிரிப்படம்,
பிஜல்பூர், இராஜஸ்தான்.

**மேற்கண்ட 3 வெள்ளி விழா திட்டங்களை நிறைவேற்ற ரூ. 300 இலட்சங்கள் தேவைப்படுகிறது**

- ரூ. 1 இலட்சம் கொடுக்கக்கூடிய 300 ஆதரவாளர்கள் (அல்லது)
- ரூ. 50 ஆயிரம் (அல்லது) ரூ. 20 ஆயிரம் (அல்லது) ரூ. 10 ஆயிரம் கொடுக்கக்கூடிய ஆதரவாளர்கள் (அல்லது)
- தங்களால் முடிந்த காணிக்கையைக் கொடுக்கக் கூடிய ஆதரவாளர்களை குடும்பமாக, குழுவாக, ஊழியங்களாக, சபைகளாக தேவன் எழுப்பும்படியாக ஜெபியுங்கள்.

மேலும் மாபெரும் வெள்ளிவிழா திட்டத்திற்கென உங்களால் முடிந்த நிதி உதவியை ஜெபித்து **"ஷாலோம் வெள்ளிவிழா திட்டத்திற்கான நிதி உதவி"** என குறிப்பிட்டு அனுப்பவும். ஜெபித்து கொடுக்கக்கூடிய புதிய ஆதரவாளர்களை அறிமுகம் செய்து வெள்ளிவிழாத் திட்டங்களை நிறைவேற்ற முன் வாருங்கள்.

**"....எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்லவேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்."** நெகே. 2:18

# உங்கள் பங்கு

**பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் நற்செய்தி பணியில்**
**வெள்ளி விழா ஆண்டு சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றும் பணியில்**

வெள்ளிவிழா ஆண்டில் (2015–2016) 250 கிராம ஆலயங்கள் கட்டிமுடிக்கப்பட **ரூ. 5 லட்சங்கள், ரூ. 3 லட்சங்கள், ரூ. 2 லட்சங்கள்** அல்லது உங்களால் முடிந்த நிதி உதவி அனுப்பி கிராம ஆலயங்களைக் கட்டித் தரலாம்.

(1) குஜராத், தாகோத்தில் ஷாலோம் திருமண்டல அலுவலகம், பணித்தள அலுவலம் மற்றும் ஷாலோம் ஜெப மையம் – ஷாலோம் பவன்

(2) மத்தியப்பிரதேசத்தில் அந்தர்வேலியா கிராமத்தில் கட்டப்படவுள்ள ஷாலோம் போலயம் மற்றும் ஊழியர் பயிற்சிக் கூடம்.

(3) இராஜஸ்தானில், பிஜல்பூர் கிராமத்தில் ஷாலோம் பள்ளி 1ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை பள்ளிக்கூடம் மற்றும் ஆதிவாசி மாணவர் விடுதி.

மேற்கண்ட மாபெரும் மூன்று வெள்ளிவிழாத் திட்டங்களையும் நிறைவேற்ற தேவையான **ரூ. 300 இலட்சங்கள்** சந்திக்கப்பட உங்கள் பங்காக **ரூ. 1 இலட்சம், ரூ. 50 ஆயிரம், ரூ. 20 ஆயிரம், ரூ. 10 ஆயிரம்** அல்லது உங்களால் முடிந்த காணிக்கை கொடுத்து தாங்க முன் வாருங்கள்.

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | **SHARING LOVE MISSION (Tuticorin Branch)** |
| TMB வங்கிக் கணக்கு எண் | : | **106100710400009 (IFS Code : TMBL0000106)** |
| Axis வங்கிக் கணக்கு எண் | : | **105010100094373 (IFS Code : UTIB0000105)** |
| ICICI வங்கிக் கணக்கு எண் | : | **613901112799 (IFS Code : ICIC0006139)** |

**SHARING LOVE MISSION**
தலைமை அலுவலகம்
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008, Tamil Nadu, Phone: 0461 - 2375468,
Cell : 9345675468 (Bro. Sam Gunaseelan)

**SHARING LOVE MISSION**
பணித்தள அலுவலகம்
Shalom Bhavan, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat. Ph. : 02673 - 268480,
Cell : 09377445468 (Bishop. V. Devadass)
E-mail : bishop@shalommission.in

**email : info@shalommission.in website : www.shalommission.in**

**இதைப் படித்தபின்பு மற்றவர்களுக்குக் கொடுத்து ஊழியத்தை அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம். நன்றி!**



## Rev. Dr. V. டேவிட்

Chairman :
St. Paul's Arts & Science College For Women & St. Paul's Matric & Hr. Sec. School, Coimbatore - 25

## சிறப்பு பணித்தள ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையாலும், அவருடைய அநாதி தீர்மானத்தின்படி நான் கடந்த செப்டம்பர் மாதம் 3–ம் தேதி முதல் 6–ம் தேதி வரை ஷாலோம் பணித்தளத்தைப் பார்வையிடும்படி சென்றிருந்தேன். 3–ம் தேதியன்று பணித்தளம் வந்து சேர தேவன் கிருபை செய்தார். 4–ம் தேதியன்று **சகோ. சாமுவேல்** அவர்களுடன் மத்தியப்பிரதேசத்தில் உள்ளடங்கிய கிராமமாகிய விசல்பூர் கிராமத்திற்கு சென்றோம். அங்கு ஷாலோம் சபையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு தேவ செய்தியை பகிர்ந்து கொள்ள தேவன் கிருபை செய்தார். **சகோ. சாமுவேல்** அவர்கள் தேவ செய்தியை மொழிபெயர்ப்பு செய்தார்கள். கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் தேவ வார்த்தையின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து மறுநாள் காலையில் இராஜஸ்தான் மாநிலத்திற்கு **பேராயர். தேவதாஸ்** அவர்கள் குடும்பத்துடன் கடந்து சென்றோம். செல்லும் வழியில் மத்தியப்பிரதேசத்திலுள்ள ஹரிநகர் என்ற இடத்தில் இருக்கும் ஷாலோம் மாணவர் விடுதியையும் தங்கி பயிலும் மாணவ மாணவிகளையும் கண்டோம். எங்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதியின் மூலம் கட்டப்பட்ட பாட்லா கல்வானி சபையைப் பிரதிஷ்டை செய்வதற்காக கடந்து சென்றோம். அங்கு காலை 10 மணி முதல் சுமார் **700க்கும் அதிகமான விசுவாசிகள் கூடியிருந்தனர்.** தேவ நாமம் மகிமைக்காக ஷாலோம் திருமண்டலத்திற்காக அந்த ஆலயத்தைப் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் முன்னிலையில் பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார். விசுவாசிகள் புதிதாகக் கட்டப்பட்ட ஆலயத்தில் மிகவும் சந்தோஷமாக தேவனைத் துதித்துக் கொண்டே நுழைந்தார்கள். ஆராதனை வேளையில் கர்த்தருடைய பிரசன்னம் பலமாய் இறங்கியது.

இந்த பீல் மக்கள் தேவனை எவ்வளவதிகமாய் நேசித்து, ஆடிப்பாடி துதிப்பதைப் பார்த்து தேவனை மகிமைப்படுத்தினேன். அங்கு நான் தேவ செய்தியைப் பகிர்ந்து கொள்ள **பேராயர். தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். ஆலய பிரதிஷ்டை ஆராதனை மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. முடிவில் அனைவருக்கும் அன்பின் விருந்து அளிக்கப்பட்டது. ஆராதனை முடிந்து ஜனங்கள் வெகு தூரம் நடந்தே செல்வதைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். மறுநாள் ஞாயிற்றுக் கிழமையன்று **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களோடு குஜராத் மாநிலத்தில் உள்ள கங்கேலா சபை ஆராதனையில் கலந்து கொள்ள தேவன் கிருபை செய்தார். அங்கு கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ள **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். செய்தியைக் கேட்ட அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டனர். அன்றைய தினம் மாலை வேளையில் ஷாலோம் பணித்தளத்தில் தமிழ் மிஷனெரி கூடுகையில் கலந்து கொண்டு தேவ வார்த்தையைப் பகிர்ந்து கொள்ள தேவன் கிருபை செய்தார். இந்த 3 நாட்கள் ஷாலோம் பணித்தளத்தில் ஊழியங்களை நிறைவேற்ற தேவன் கிருபை பாராட்டினார்.

**பேராயர். தேவதாஸ்** அவர்கள் தன் மனைவி **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுடன் சேர்ந்து மிகச் சிறிய அளவில் 24 வருடங்களுக்கு முன் ஆரம்பித்த ஊழியத்தின் மூலம் தற்சமயம் சுமார் **23 ஆயிரம் குடும்பங்கள் (கிட்டத்தட்ட 1,20,000 பேர்)** இயேசு கிறிஸ்துவை பற்றி அறிந்து தேவனை ஆராதித்து வருகிறார்கள். அவர்களால் கிட்டத்தட்ட **303 ஆலயங்கள் கட்டி முடிக்கப்பட்டிருப்பது** மிகவும் சிறப்பான ஒரு காரியமாகும். அதுவும் மிகவும் பின்தங்கிய Interior இடங்களிலும், மலைகளிலும் ஆலயங்கள் எழுப்பப்பட்டிருந்தது எனக்கே மிகவும் ஆச்சரியத்தையும், சந்தோசத்தையும் கொடுத்தது. தென் இந்திய மிஷனெரி யாருமே இல்லாமல் சுதேச ஊழியர்களைக் கொண்டே இந்த காரியங்களை அவர்கள் தேவ ஒத்தாசையோடு செய்திருப்பது மிகமிக ஆச்சரியமான ஒன்று.

இவ்வூழியம் நடைபெற்ற 24 ஆண்டு காலத்தில் **580 சுதேச ஊழியர்கள்** உருவாகி இருப்பதும், அவர்கள் மூலமாக **600க்கும் அதிகமான இடங்களில் ஆராதனை குழுக்கள்** செயல்படுவதும் தேவன் செய்திருக்கிற ஒரு மகத்தான கிரியையாகும். அதுவும் ஊழியத்திற்கு மிகவும் எதிர்ப்புகள் நிறைந்த மத்திய பிரதேசம், குஜராத், இராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் இவ்வூழியம் சிறப்பாக நடைபெறுவது மிகவும் பாராட்டத்தக்க ஒரு காரியமாகும்.

ஷாலோம் மிஷன் இயக்கம் செயல்படும் விதமும் அவ்வியக்கத்தில் உள்ள சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் ஊழிய ஈடுபாடும் இவ்வியக்கத்தை தலைமைத் தாங்கி நடத்தும் **Rt. Rev. தேவதாஸ்** அவர்களின் ஊழியமும் மிகவும் சிறப்பாக இருக்கிறது. தேவன்தாமே அவருடைய வெள்ளிவிழா திட்டமான ஒரு இலட்சம் குடும்பங்கள், ஆயிரம் சபைகள், ஆயிரம் ஊழியர்கள் என்ற நோக்கத்தை நிறைவேற்ற உதவி செய்வாராக. இவ்வூழியம் இன்னும் சிறப்பாக நடைபெறுவதற்கு ஒவ்வொருவரும் ஜெபிப்பதும், இன்னும் தேவைப்படும் ஆலயங்களை கட்டிக் கொடுப்பதும் நம்முடைய கடமையாகும். **குறிப்பாக இந்த வெள்ளிவிழா ஆண்டில் 250 ஆலயங்கள் கட்டி முடிக்கப்படவும், ஆதரவாளர்கள் முன் வரவும் ஜெபியுங்கள்.** மேலும் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் ஷாலோம் ஊழியங்களை ஜெபித்து, நிதி உதவி அனுப்பித் தாங்கும்படியாக அன்புடன் அழைக்கிறேன். **தேவனுக்கே மகிமை!**

## *முகவரி மாற்றங்களைத் தெரியப்படுத்துங்கள்*

*அன்பான ஆதரவாளர்களே,*

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தால், மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு எங்களிடம் அவற்றை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம். இது நாங்கள் உங்களுடன் சரியாகத் தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும்.

மேலும் உங்களது தொலைபேசி மற்றும் மொபைல் எண்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்குக் கிடைத்தவுடன் உங்களுக்கு SMS மூலம் செய்தி தெரிவிக்கப்படும். தொடர்புக்கு : 9698144522

## St. Paul's Arts & Science College For Women &
## St. Paul's Matric & Hr. Sec. School, நிறுவனர்

# Rev. டேவிட் அவர்களின் பணித்தள வருகை



பாட்லா கல்வானி கிராம ஆலய பிரதிஷ்டையின் போது



பாட்லா கல்வானி கிராம ஆலயத்தில் கலாச்சார வரவேற்பு



பாட்லா கல்வானி கிராம ஆலயத்தில் தேவ செய்தி



பாட்லா கல்வானி கிராம ஆலயத்தில் கூடியிருந்த தேவ ஜனங்கள்





குஜராத், கங்கேலா கிராம ஆலயத்தில் தேவ செய்தியளிக்கும் Rev. டேவிட் அவர்கள் & கூடியிருந்த தேவ ஜனங்கள்





மத்தியப்பிரதேசம், விசல்பூர் கிராம ஆலயத்தில் தேவ செய்தியளிக்கும் Rev. டேவிட் அவர்கள் & கூடியிருந்த தேவ ஜனங்கள்

## ஷாலோம் கிராம ஆலயம்

# பாட்லா கல்வானி

### இராஜஸ்தான்



பாட்லா கல்வானி என்ற கிராமம் இராஜஸ்தானிலுள்ள பான்ஸ்வாடா மாவட்டத்திலுள்ள குசல்கட் தாலுகாவில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தில் வாழும் மக்கள் சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாகவும், விக்கிரக ஆராதனை செய்பவர்களாயும் வாழ்பவர்கள். ஊழியர். ஹிராலால் கட்டாரா அவர்கள் இயேசுவை அறியாத போது சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார்.

இவருடைய சரீரம் முழுவதும் எரிச்சல் ஏற்பட்டு, மிகவும் கஷ்டப்பட்டார். சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. இந்நிலையில் ஷாலோம் ஊழியர். தார்சிங் கட்டாரா அவர்கள் இயேசுவைப் பற்றிக் கூறி, ஜெபித்த போது தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். தொடர்ந்து ஷாலோம் பாட்லா கட்டாரா ஆலயத்திற்குச் சென்று ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தார்.

பின்பு ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரம் ஏற்பட்டு, தன்னை அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, 1 மாத ஊழியப்பயிற்சி பெற்று, தனது சொந்த கிராமமாகிய பாட்லா கல்வானியில் 2000–ல் தனது வீட்டில் 4 பேருடன் கூட்டம் நடத்த ஆரம்பித்தார். ஆரம்பத்தில் கூட்டம் நடத்தக் கூடாது என எதிர்ப்புகள் வந்தது. ஆனாலும் சோர்ந்து போகாமல் விசுவாசத்தில் உறுதியாயிருந்து கூட்டத்தை தொடர்ந்து நடத்தினார். இந்தக் கூட்டத்தில் பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்ட கமலேஷ் முனியா என்பவருக்காக ஊழியர் ஜெபித்ததில் தேவன் பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் அநேகர் கூட்டத்திற்கு வர ஆரம்பித்தனர். சபை வளர்ந்து பெருகியது. தற்போது 75 குடும்பங்கள் சபையில் வாரந்தோறும் இயேசுவை ஆராதித்து வருகிறார்கள்.

பின்பு ஊழியர் காணிக்கையாக கொடுத்த நிலத்தில் சிறிய ஆலயம் ஒன்று கட்டப்பட்டது. நாளுக்கு நாள் அதிகமான ஆத்துமாக்கள் சபைக்கு வர ஆரம்பித்தனர். பின்பு இடப்பற்றாக்குறையினால் பழைய ஆலயம் இடிக்கப்பட்டு, அதே நிலத்தில் தேவ நாம மகிமைக்காக **Rev. டேவிட்** (St.Pauls Hr.Sec.School, Coimbatore) அவர்கள் குடும்பத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதி மூலமாக புதிய ஆலயம் கட்டப்பட்டது. 05–09–2015 அன்று பேராயர் தேவதாஸ் அவர்கள் ஜெபிக்க, Rev. டேவிட் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேவனுக்கே மகிமை!

**ரூ. 3 இலட்சங்கள் (or) ரூ. 2 இலட்சங்கள் மதிப்புகளில்**
**இந்த 2015 ஆம் ஆண்டிற்குள் 100 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க**
**முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!**

## செப்டம்பர் மாதத்தில் நமது பணித்தளத்தில் நடைபெற்ற ஊழியங்கள்...

***"என்னோடே கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள். நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக!" சங்கீதம் –34:3***

கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும் தங்களுடைய ஜெபங்களினாலும் கடந்த செப்டம்பர் மாத ஊழியங்களை நிறைவேற்ற தேவன் உதவி செய்தார். தேவனுடைய நாமம் மகிமைப்படுவதாக!

**ஷாலோம் ஊழியர் மாதாந்திரக் கூடுகை**

கடந்த மாதம் ஷாலோம் ஊழியர்களின் மாதாந்திர கூடுகை நடைபெற்றது. குஜராத் ஊழியர்களுக்கென்று 3–ம் தேதியும், மத்தியப்பிரதேச ஊழியர்களுக்கென்று 2–ம் தேதியும் மற்றும் இராஜஸ்தான்–1 ஊழியர்களுக்கென்று 7–ம் தேதியும் & இராஜஸ்தான்–2 ஊழியர்களுக்கென்று 11–ம் தேதியும் நடைபெற்றது. இக்கூடுகைகளில் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள்.

**மூத்த சுதேச ஊழியர்களின் மனைவிமார் கூடுகை**

கடந்த மாதம் 1–ம் தேதி ஷாலோம் மூத்த சுதேச ஊழியர்களின் மனைவிமார் கூடுகை நடைபெற்றது. இதில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள்.

**ஷாலோம் திருமண்டல தலைவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர் பயிற்சி**

கடந்த மாதம் 8,9,10 ஆகிய தேதிகளில் ஷாலோம் திருமண்டலத்தின் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலத்தின் தலைவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கென்று **டாக்டர். ஜே க்ளார்க்** மற்றும் **டாக்டர். ஏபல்** ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் **பேராயர்.தேவதாஸ், சகோதரி. வஹிதா தேவதாஸ்** மற்றும் **சகோ.டைட்டஸ்** ஆகியோர் மற்றும் குஜராத், மத்தியப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலத்தின் ஷாலோம் திருமண்டல தலைவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துக் கொண்டனர். இந்த பயிற்சியில் வேதத்தில் சிறந்த தலைவர்களாக தாவீது மற்றும் யோசுவா அவர்களின் தலைமைத்துவத்தை எடுத்துக்காட்டாகக் காண்பித்து பயிற்சியளிக்கப்பட்டது. மேலும் திருமண்டலத்தின் வளர்ச்சி மற்றும் ஒருங்கிணைப்பு பற்றி கலந்து ஆலோசிக்கப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது.

**வாலிபர் கூடுகை**

குஜராத் மற்றும் மத்தியப்பிரதேச ஷாலோம் சபைகளில் உள்ள வாலிபர்களுக்கென்று கூடுகை நடைபெற்றது. இதில் குஜராத் வாலிப பெண்களுக்கென்று 12–ம் தேதியும், வாலிப ஆண்களுக்கென்று 13–ம் தேதியும், மத்தியப்பிரதேசத்திலுள்ள அந்தர்வேலியா பகுதி சபை வாலிப பெண்களுக்கு 19–ம் தேதியும், வாலிப ஆண்களுக்கு 20–ம் தேதியும், ராணாப்பூர் பகுதி சபை வாலிப பெண்களுக்கு 26–ம் தேதியும், வாலிப ஆண்களுக்கு 27–ம் தேதியும் நடைபெற்றது. இக்கூடுகைகளில் 2000க்கும் அதிகமான வாலிபர்கள் கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெற்றனர். இதன் விபரம் அடுத்த மாத இதழில் தருகிறோம்.

<u>மூப்பர்களின் மனைவிமார் கூடுகை</u>

கடந்த மாதம் 15,22 மற்றும் 29 தேதிகளில் இராஜஸ்தான் மாநிலத்தில் பேடவ், தாடுகா, கோய்கா ஆகிய பகுதிகளில் உள்ள ஷாலோம் சபைகளின் மூப்பர்களின் மனைவிமார்களுக்கென்று கூடுகை நடைபெற்றது. இதில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். இக்கூட்டங்களில் 1000க்கும் அதிகமானோர் கலந்துக் கொண்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும், வல்லமையையும், ஆசீர்வாதத்தையும் பெற்றனர்.

<u>சேவா பாரத் மூலமாக பட்டமளிப்பு விழா</u>

கடந்த மாதம் 8 முதல் 10 வரை சேவா பாரத் ஸ்தாபனத்தின் மூலம் இராஜஸ்தான் மாநிலத்தில் கொடுக்கப்பட்ட 1 வருட வேதாகம பயிற்சியை முடித்த 40 ஊழியர்களுக்கென்று பட்டமளிப்பு விழா இராஜஸ்தானிலுள்ள அஜ்மீரில் நடைபெற்றது. இதில் ஐ.சி.டி மாணவர்கள் 40 பேர் கலந்து கொண்டு பட்டம் பெற்றனர்.

## *ஷாலோம் உபவாச ஜெபங்கள்*

| நாள் & நேரம் | இடம் |
|---|---|
| **10.10.2015,** ***சனிக்கிழமை*** நேரம் : ***மாலை 5.00 மணிக்கு*** | M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, **மார்த்தாண்டம்** தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell: 94876-89869, **சகோ. ஜார்ஜ்,** Cell: 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell: 94868-64820 |
| **17.10.2015,** ***சனிக்கிழமை*** நேரம் : ***காலை 10.00 மணி முதல் 1 மணி வரை*** | எபனேசர் பிளாசா, பரமா தெரு, WCC ஜங்சன், **நாகர்கோவில்.** தொடர்புக்கு: Cell : 9698844511 |
| **24.10.2015,** ***சனிக்கிழமை*** நேரம் : ***காலை 10.00 மணி முதல் 1 மணி வரை*** | No. 102 - 2வது மெயின் ரோடு, சத்யா நகர், பாடி, **சென்னை** தொடர்புக்கு: **சகோ. ஜாண் ஜெயசிங்,** Cell: 9698244577 |

**தேவ பிள்ளைகள் அனைவரும் குடும்பமாய் கலந்துக் கொண்டு ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இந்தியத் தேசத்திற்காகவும் ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அன்பாய் அழைக்கிறோம்.**

### *உங்களுக்காக ஜெபிக்கிறோம்...*



**அன்பான ஆதரவாளர்களே!** உங்களுக்காகவும் உங்களது குடும்பத்திற்காகவும் நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். மேலும் உங்களது ஜெபக் குறிப்புகளை **அன்பு பகிர்வு இயக்கம்** தலைமை அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரியப்படுத்தினால் நாங்கள் உங்களுக்காக விசேஷமாக ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

**தொடர்புக்கு : போன் : 9698044522**

## தமிழகத்தில் நடைபெற்ற ஊழியங்கள்

**ஜெபக் கூடுகை – 22.08.2015, இயேசு சுகமளிக்கிறார், தூத்துக்குடி.**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 22.08.2015 சனிக்கிழமை அன்று தூத்துக்குடியில் இயேசு சுகமளிக்கிறார் ஊழியத்தின் சார்பில் நடைபெற்ற ஜெபக் கூட்டத்தில் நமது ஷாலோம் பணித்தளங்களிலிருந்து வந்திருந்த சுதேச ஊழியர்கள் 6 பேர் கலந்து கொண்டு தங்களை அறிமுகம் செய்து கொண்டு பீலி மொழியில் பாடல் பாடி விசுவாசிகளை உற்சாகப்படுத்தினர். இதில் ஊழியர் **சகோ. ரமேஷ் K. டாமோர்** அவர்கள் தனது அனுபவ சாட்சியினை பகிர்ந்து கொண்டார். இயேசு சுகமளிக்கிறார் ஊழியத்தின் சார்பில் ஊழியர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. அதன்பின் ஷாலோம் முன்னேற்றப் பணியாளர் **சகோ. ஜான்சன் ஜெபராஜ்** அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய **சகோ. ஜெபராஜ்** அவர்களுக்காகவும், இயேசு சுகமளிக்கிறார் ஊழியங்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். **தேவனுக்கே மகிமை!**

**ஞாயிறு ஆராதனை – 23.08.2015, Power IPC சபை, தூத்துக்குடி.**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 23.08.2015 ஞாயிற்றுக்கிழமை தூத்துக்குடி Power IPC சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் ஷாலோம் **பேராயர் வே. தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார். மேலும் நமது ஷாலோம் சுதேச ஊழியர்கள் இரண்டு பேர் கலந்து கொண்டு தங்களது அனுபவ சாட்சிகளைப் பகிர்ந்து கொண்டனர். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் **Pr. ரூபன் சாமுவேல்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். **தேவனுக்கே மகிமை!**

**ஞாயிறு ஆராதனை–23.08.2015, புதுவாழ்வு கிறிஸ்தவ விசுவாச ஜெனரல் அசெம்பளி சபை, தூத்துக்குடி.**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 23.08.2015 ஞாயிற்றுக்கிழமை தூத்துக்குடி புதுவாழ்வு கிறிஸ்தவ விசுவாச ஜெனரல் அசெம்பளி சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் சுதேச ஊழியர்கள் இரண்டு பேர் கலந்து கொண்டு தங்களது அனுபவ சாட்சிகளைப் பகிர்ந்து கொண்டதோடு, பீலி மொழியல் பாடல் பாடி விசுவாசிகளை உற்சாகப்படுத்தினார்கள். ஊழியர்களின் சாட்சியினை **சகோ. டேவிட்** அவர்கள் மொழிபெயர்த்ததோடு, காணிக்கைக்கான ஜெபத்தினையும் ஏறெடுத்தார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் **Pr. கனகராஜ்** அவர்களுக்காக வேனைத் துதித்து நன்றி கூறுகிறோம். **தேவனுக்கே மகிமை!**

**ஞாயிறு ஆராதனை – 23.08.2015, W.M.E. சபை, தூத்துக்குடி.**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 23.08.2015 ஞாயிற்றுக்கிழமை தூத்துக்குடி W.M.E. சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது **பேராயர் வே. தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு தேவ செய்தியினை வழங்கினார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் **Pr. எட்வர்ட் சாம்ராஜ்** அவர்களுக்காக வேனைத் துதித்து நன்றி கூறுகிறோம். **தேவனுக்கே மகிமை!**

**கன்வென்ஷன் கூட்டங்கள் – 4–6 09.2015 – நாகலாபுரம்**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த **04.09.2015** முதல் **06.09.2015** வரை மூன்று நாட்கள் (வெள்ளி, சனி & ஞாயிறு) நாகலாபுரத்திலுள்ள CSI திரித்துவ ஆலயத்தில் நடைபெற்ற சேகர அளவிலான வருடாந்திர ஸ்தோத்திர பண்டிகை கன்வென்ஷன் கூட்டங்களில்

நமது ஷாலோம் ஊழியத்தின் சார்பில் தலைமை அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டனர். இதில் **சகோ. ஆலன் எல்விஸ்** அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை வேளையைப் நடத்தியதோடு கொண்டதோடு, ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் பகிர்ந்து கொண்டார்கள். **சகோ. ராஜமாணிக்கம்** அவர்கள் இசை மீட்டினார்கள். பின்னர் **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டார்கள். ஷாலோம் ஊழியர்களை அழைத்து பயன்படுத்திய ஆலய போதகர் **Rev. பாஸ்கர் அல்பர்ட் ராஜன்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். **தேவனுக்கே மகிமை!**

**ஞாயிறு ஆராதனை – 13.09.2015 – உல்லாச நகர்**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 13.09.2015 ஞாயிறு அன்று வி.கே. புரம், உல்லாச நகரிலுள்ள CSI St. தாமஸ் தேவாலயத்தில் நடைபெற்ற ஞாயிறு காலை ஆரதனையில் நமது ஷாலோம் ஊழயத்தின் சார்பில் நமது ஷாலோம் முன்னேற்றப் பணியாளர் **சகோ. டேவிட்** அவர்கள் கலந்த கொண்டு ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டு, தேவ செய்தியையும் வழங்கினார்கள். இந்த ஊழியத்திற்கு வாய்ப்பளித்த சபை உபதேசசியார் **சகோ. சஞ்சித்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**ஞாயிறு ஆராதனை – 13.09.2015 – குன்னத்தூர் (மார்த்தாண்டம்)**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 13.09.2015 ஞாயிறு அன்று குன்னத்துரிலுள்ள CSI தேவாலயத்தில் நடைபெற்ற ஞாயிறு காலை ஆரதனையில் நமது ஷாலோம் ஊழயத்தின் சார்பில் நமது ஷாலோம் முன்னேற்றப் பணியாளர் **சகோ. செல்வதுரை** அவர்கள் கலந்த கொண்டு ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டு, தேவ செய்தியையும் வழங்கினார்கள். இந்த ஊழியத்திற்கு வாய்ப்பளித்த சபை போதகர் **Rev. ஜேக்கப் ராஜ்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**ஞாயிறு ஆராதனை – 20.09.2015 – கொக்குடிவிளை (மார்த்தாண்டம்)**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 20.09.2015 ஞாயிறு அன்று கொக்குடிவிளையிலுள்ள CSI தேவாலயத்தில் நடைபெற்ற ஞாயிறு காலை ஆரதனையில் நமது ஷாலோம் ஊழயத்தின் சார்பில் நமது ஷாலோம் முன்னேற்றப் பணியாளர் **சகோ. செல்வதுரை** அவர்கள் கலந்த கொண்டு ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டு, தேவ செய்தியையும் வழங்கினார்கள். இந்த ஊழியத்திற்கு வாய்ப்பளித்த சபை போதகர் **Rev. ஐசக் பால் ஆனந்த்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**ஞாயிறு ஆராதனை – 20.09.2015 – கோழியோட்டுவிளை (மார்த்தாண்டம்)**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 20.09.2015 ஞாயிறு அன்று கோழியோட்டுவிளை சால்வேஷன் ஆர்மி சபையில் நடைபெற்ற ஞாயிறு காலை ஆரதனையில் (காலை 10.30 மணி) நமது ஷாலோம் ஊழயத்தின் சார்பில் நமது ஷாலோம் முன்னேற்றப் பணியாளர் **சகோ. செல்வதுரை** அவர்கள் கலந்த கொண்டு ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டு, தேவ செய்தியையும் வழங்கினார்கள். இந்த ஊழியத்திற்கு வாய்ப்பளித்த சபை போதகர் **மேஜர். பிரைட்** அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம்.

# ஞாபகப்படுத்துகிறோம்

***அன்பான உண்டியல் ஆதரவாளர்களுக்கு,***




அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! கிறிஸ்துமஸ் பண்டிகை தினத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நாம், வரப்போகின்ற கிறிஸ்துமஸைக் கொண்டாட ஜெபித்து இப்பொழுதே ஆயத்தப்படுவது நமது கடமையாகும். மேலும் நமது பணித்தளங்களில் நாம் தாங்கி வரும் பீல் ஆதிவாசி விசுவாசிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் நன்றாகப் படித்தும், ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தும் வருகிறார்கள்.

பீல் ஆதிவாசி சிறுவர்களின் கல்வி மற்றும் கிறிஸ்துமஸ் நாளுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு, நீங்கள் எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் அந்த ஆதிவாசிப் பிள்ளைகளுக்கென காணிக்கைகளை சேகரித்து வைத்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம். இந்தக் காணிக்கையை ஆதிவாசிப் பிள்ளைகளின் கிறிஸ்துமஸ் தேவைகளுக்காகக் கொடுப்பீர்கள் என்று நம்புகிறோம்.

அதோடு பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காகக் கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகக் கொடுக்கலாம். அல்லது எங்களது தலைமை அலுவலகத்திற்கு நேரில் வந்தும் கொடுக்கலாம். அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O / D.D / Cheque** மூலமாக **SHALOM CHARITY MISSION** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு **உங்களின் தெளிவான முகவரியுடன், உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். நீங்கள் உண்டியலைத் திறக்க உங்களுக்கு சாவி **(Key)** வேண்டுமானால் ***9698944522*** என்ற செல் நம்பருக்குத் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

**தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் நடைபெறும்**

## வாக்குத்தத்த உபவாச ஜெபக் கூடுகை

நாள் : **01.10.2015 (வியாழக் கிழமை)** நேரம் : **காலை 9.15 முதல் 1.00**

தேவச் செய்தி : ***Prof. C.S.*** **கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**

New No. 5A/323, Old.No. 5/168, கால்டுவெல் காலனி 3 வது தெரு, தூத்துக்குடி **– 628 008.**

**தேவ பிள்ளைகள் அனைவரும் குடும்பமாய் கலந்துக் கொண்டு ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இந்தியத் தேசத்திற்காகவும் ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அன்பாய் அழைக்கிறோம்.**



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 26

**பதில் எழுதுக :**

1. நீதிமான்களுடைய இரட்சிப்பு யாரால் வரும்?
2. அவைகள் உம்முடைய (கர்த்தருடைய) கணக்கில் இருக்கிறது. எவைகள்?
3. பணத்தினால் திருப்தியடைவதில்லை யார்?
4. யாருடைய சமாதானம் பெரிதாயிருக்கும்?
5. எவன் தன் பாதி வயதிலே அதைவிட்டு தன் முடிவிலே மூடனாவான்?
6. ஏன் கர்த்தருடைய இருதயம் குழம்புகிறது என்று சொல்லுகிறார்?
7. சமுத்திரத்தின் நடுமையமாகிய ஆழத்தில் நீர் என்னை தள்ளிவிட்டீர் என்று ஜெபித்தது யார்?
8. நடுமையம் என்று வேதத்தில் வேறு எங்கு வாசிக்கலாம்.
9. ராக்கால் என்பது குற்றாலத்திலுள்ள ஒரு இடம். வேதத்தில் ராக்கால் என்பது என்ன?
10. திருநெல்வேலி அல்வா உலகப் பிரசித்திப் பெற்றது. வேதத்தில் அல்வா என்பது என்ன?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **17.10.2015**

**கடந்த செப்டம்பர் மாத வேத வினா போட்டி எண் 25க்கான சரியான விடைகள்**

1. மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து–ரோமர் 6:9
2. நற்செய்தி. – நீதி. 15 : 30
3. பாபிலோன். – எரே. 51 : 37
   ஆத்சோர். – எரே. 49 : 33
   எருசலேம். – எரே. 9 : 11
4. அனனியா. – அப். 5 : 5
5. துக்கத்தினால். – சங். 31 : 9
6. கெதலியா. – செப். 1 : 1
7. இஸ்ரவேலுடைய நியாயாதிபதியை–மீகா 5:1
8. லபிதோத். நியா. 4 : 4
9. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்திற்கு அழைக்கப்பட்டவர்கள். – வெளி. 19 : 9 (அ) வெளி. 1 : 3, 14 : 13, 16 : 15, 22 : 14
10. போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தி. – 1 தீமோ. 6 : 6

**கடந்த செப்டம்பர் மாத வேத வினாப் போட்டி எண் 25 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 25 நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. Sis.** ரமோலா **S.** பாபு, நாகர்கோவில். **2. Sis. ஷீலா எலியேசர்,** தாரங்கபாடி.
**3. Bro. ஞானமணி ஜெயபால்,** S. கைலாசபுரம்

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**


**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

## ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE**

**M/S. SHARING LOVE MISSION,**

New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

| | |
|---|---|
| **CHENNAI BRANCH OFFICE**<br>**Bro. John Jeyasingh**<br>No.102-2nd Main Road<br>Sathya Nagar, Padi,<br>CHENNAI - 600050.<br>Cell : 9698244577 | **MARTHANDAM BRANCH OFFICE**<br>**Bro. Selvadurai.G**<br>Bethel,<br>25-7/A 1-Block 25, Paruthivilai,<br>Kannakode, Marthandam - 629165<br>Cell : 9487689869 |
| **MUMBAI BRANCH OFFICE**<br>**Bro. Prabhakaran. P.**<br>C/o. Mr. P.Immanuel,<br>C-2, Plot No.123-Old Mhada Colony,<br>Mangalya Co.Op.Society Ltd,<br>Pokharan Road No.2,<br>Thane West - 400610<br>Cell : 9768282699 | **NAGERCOIL BRANCH OFFICE**<br>**Bro. Robinson. S.**<br>Ebenezer Plaza, Parama Street,<br>WCC Junction,<br>Nagercoil - 629001<br>Cell : 9688144522 |
| **MADURAI BRANCH OFFICE**<br>**Bro. Chandra Paul. S**<br>6/3, Nellaiappar Puram 7th Street,<br>Tirunagar (p.o)<br>MADURAI-625006<br>Cell : 9698644522 | **TIRUNELVELI BRANCH OFFICE**<br>**Bro. David. R**<br>56 A/4,-C.S.I Church South Street,<br>(Upstairs) STC road,<br>Perumalpuram, Palayamkottai<br>TIRUNELVELI-627007<br>Cell 9698844599 |

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும்**
**சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

Tamilnad Mercantile Bank

**174100710400061**
**Branch : Tiruchendur Road**
(IFS Code : TMBL0000174)

AXIS BANK

**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

## நாட்டு நடப்புச் செய்திகள்

அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் மாகாணத்தில் இருந்து புறப்பட்ட பரிட்டிஸ் ஏர்வேஸ் நிறுவனத்திற்கு சொந்தமான விமானத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதில் 2 பயணிகளுக்கு லேசான தீக்காயம் ஏற்பட்டது. விமானத்தில் தீ பிடித்தவுடன் விமானம் நிறுத்தப்பட்டு, அவசர வழிகள் திறக்கப்பட்டு 159 பயணிகளும் 13 சிப்பந்திகளும் இறக்கிவிடப்பட்டனர்.

---

லேசர் கதிர்களைப் பயன்படுத்தும் ஒரு அதி நவீன புரட்சிகர தொழில் நுட்பத்தை லண்டனில் உள்ள நிபுணர்கள் மூளை அறுவை சிகிச்சையில் பயன்படுத்தியுள்ளனர். உடலில் உள்ள கட்டி புற்றுநோய்க் கட்டியா இல்லையா என்பதை இத் தொழில்நுட்பம் உடனடியாகக் காட்டிவிடும். புற்றுநோய் திசுக்களை மருத்துவர்கள் துல்லியமாகவும் வேகமாகவும் அகற்றுவதற்கு இந்த தொழில்நுட்பம் உதவும் என்று நம்பப்படுகிறது.

---

அஸ்ஸாம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் சிக்கி, 41க்கும் அதிகமானோர் பலியாயினர். மேலும் அந்த மாநிலத்தைச் சேர்ந்த 18 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

---

சத்தீஸ்கர் மாநிலத்தில் ராய்சர் மாவட்டத்தில், புதிய மின்சார உற்பத்தி நிலையத்தை நிறுவும் திட்டத்தில் ஒப்பந்த பணியாளராக பணியாற்றிய சீனாவைச் சேர்ந்த ஜோங் கிட்டோவ் என்ற பொறியாளர் அவர் தனது சக பொறியாளருடன் நடைபயிற்சி மேற்கொண்டபோது காட்டு யானை தாக்கியதால் சம்பவ இடத்திலேயே பலியானார்.

---

ஏமன் நாட்டில் அதிபர் அபத்ரப்போ மன்சூர் ஹாத்திக்கு எதிராக ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் போராட்டம் நடத்தினார்கள். இது தீவிரமடைந்து உள்நாட்டுப் போராக மாறி பலரது உயிரை பலி வாங்கி வருகிறது. இதன் ஒரு பகுதியாக ஹுடியா துறைமுகம் அருகே எரிபொருள் கடத்தல் கும்பலை குறிவைத்து ஹவுதி கூட்டுப்படைகள் தாக்குதல் நடத்தின. இதில் 20 இந்தியர்கள் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

<u>தலைமை அலுவலகம்</u>

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468, 2377737
Cell : 9345675468

<u>பணித்தள அலுவலகம்</u>

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 07043334501
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

## ஷாலோம் கிராம ஆலயம்

# அலிப்புரா

### மத்தியப்பிரதேசம்



அலிப்புரா என்ற கிராமம் மத்தியப்பிரதேசத்திலுள்ள ஜாபுவா மாவட்டத்தில் தாந்லா தாலுகாவில் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் வாழும் மக்கள் திருடுவது, சாராயம் குடிப்பது, பில்லிசூனியம், மந்திரம் செய்வதைத் தொழிலாகக் கொண்டு வாழும் பழக்கமுடையவர்கள். இந்த சூழ்நிலையில் வாழ்ந்தவர்தான் சகோ. சூப்பர் டாமோர். அவரது தாத்தா லிம்ஜி மோனியா மற்றும் பாட்டி கோர்கி மோனியா இருவருமே பில்லிசூனியத்தினால் பாதிக்கப்பட்டு, வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அவர்களின் சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை.

இந்நிலையில் ஷாலோம் ஊழியர் சகோ. மன்னு பாபோர் அவர்கள் குஜராத்திலிருந்து வந்து இயேசுவைப் பற்றிக் கூறி, ஜெபித்த போது இவருடைய தாத்தா மற்றும் பாட்டிக்கு தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். மேலும் ஊழியத்திற்கென்று தங்கள் இல்லத்தை திறந்து கொடுக்க, அவர்களின் வீட்டில் ஷாலோம் ஊழியர் சகோ. மன்னு பாபோர் 12 குடும்பங்களுடன் கூட்டம் நடத்த ஆரம்பித்தார்.

கிராம மக்கள் கூட்டம் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அதன் பின் மத்தியப்பிரதேசம் ஹக்வானி கிராமத்தைச் சேர்ந்த ஊழியர். வால்சிங் சாரேல் அவர்கள் கூட்டத்தைப் பொறுப்பேற்று நடத்தினார். அப்பொழுது இரத்தப்போக்கு வியாதியினால் கஷ்டப்பட்ட ரமீலா பேன் என்ற சகோதரி கூட்டத்தில் பங்கு பெற்றார்கள். அந்த சகோதரிக்கு ஊழியர் ஜெபித்ததில் தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் சபைக்கு மக்கள் அதிகமாக வர ஆரம்பித்தனர்.

2010–ம் ஆண்டிலிருந்து ஊழியர் சூப்பர் டாமோர் தனது சொந்த கிராமமான அலிப்புரா இரட்சிக்கப்பட வேண்டுமென்ற வாஞ்சையுடன், ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, 1மாத ஊழியப்பயிற்சி பெற்று, ஷாலோம் அலிப்புரா சபையை பொறுப்பேற்று நடத்தி வருகிறார். தற்போது சபையில் 25 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு, ஆராதித்து வருகிறார்கள். இந்நிலையில் ஊழியர் சூப்பர் டாமோர் அவர்கள் காணிக்கையாக கொடுத்த நிலத்தில் தற்போது புதிய ஆலயம் கட்டப்பட்டு, தேவ நாம மகிமைக்காக 17–09–2015 அன்று பேராயர். தேவதாஸ் அவர்கள் மூலம் ஜெபித்து பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேவனுக்கே மகிமை!

இந்த ஆலயம் நாகர்கோவில், **சகோ. பொன்னையா ரவி நியூட்டன்** அவர்கள் குடும்பத்தின் சார்பில் Home Church மூலம் கொடுக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் கட்டப்பட்டது.

**ரூ. 3 இலட்சங்கள் (or) ரூ. 2 இலட்சங்கள் மதிப்புகளில்**
**இந்த 2015 ஆம் ஆண்டிற்குள் 100 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க**
**முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD PROJECT



மாணவனின் பெயர் : **வில்சன் R. புரியா**

தந்தையின் பெயர் : ரமன் புரியா

தாயாரின் பெயர் : சுக்லி புரியா

பிறந்த நாள் : 13.07.2005

படிக்கும் வகுப்பு : 5th Std.

சொந்த ஊர் : வரம்கேடா

மாவட்டம் & மாநிலம் : தாகோத், குஜராத்

மாணவனின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:– இவனுடைய தந்தை இயேசுவை அறியாததற்கு முன் சாராயம், பீடி தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக இருந்தார். இவனுடைய தாயார் மற்றும் சகோதரி பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டு 6 மாதங்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். விடுதலைக்காக எவ்வளவோ மந்திரம் செய்தும் எந்த பலனுமில்லை. இந்நிலையில் வடுவா என்ற கிராமத்தில் நடைபெற்ற இயேசுவின் கூட்டத்தில் இவனுடைய தாயாரையும் சகோதரியையும் அழைத்துச் சென்றார். அங்கு ஊழியர் ஜெபித்ததில் தேவன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை கொடுத்தார். அதினிமித்தம் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். தொடர்ந்து குடும்பமாக ஷாலோம் வரம்கேடா சபையில் அங்கத்தினர்களானார்கள். கடந்த 10 வருடங்களாக ஷாலோம் வரம்கேடா சபையில் விசுவாசியாக இருந்து வருகிறார்.

மாணவனைக்குறித்து :– வில்சன் நன்றாக படிப்பான். ஜெபம் செய்வான். விளையாட்டிலும் ஆர்வம் உண்டு. இவனுக்கு 2 சகோதரரும், 1 சகோதரியும் உண்டு.

ஜெபியுங்கள் :– இவனுக்காக, படிப்பிற்காக, சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்யும் வேலைக்காக ஜெபியுங்கள்.

மாணவனைத் தாங்குபவர் :– **Mr. Chandra Bose,** Calcutta.

### ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 700/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம்.

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.